வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 30.04.2025 புதன்கிழமை இதழ் : 121 பக்கங்கள் : 12




# கனடா பாராளுமன்ற தேர்தல்: இரு ஈழத்தமிழர்கள் வெற்றி!

## ஹரி, உட்பட இரு தமிழர்கள் அமைச்சர்களாக வாய்ப்பு





ரொறன்ரோ, ஏப்ரல் 30


**கனடிய பாராளுமன்றத் தேர்தலில் இரு இலங்கையர்கள் உட்பட தமிழர்கள் உட்பட மூன்று வெற்றி பெற்றுள்ளனர். ஆளும் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஹரி ஆனந்தசங்கரி, ஜூனிதா நாதன் மற்றும் அனிதா ஆனந்த், ஆகியோரே இவ்வாறு வெற்றிபெற்றுள்ளனர்.**

அத்துடன், ஹரி ஆனந்தசங்கரி, அனிதா ஆனந்த் ஆகியோருக்கு மீண்டும் அமைச்சு பதவிகள் வழங்கப்படலாம் என்றும் அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனடாவின் பாராளுமன்றத் தேர்தல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகின.

இம்முறை தேர்தலில், லிபரல் கட்சியின் சார்பில் 2 பேரும், கன்சர்வேர்ட்டிவ் கட்சி சார்பில் இருவரும் பசுமை கட்சியின் சார்பில் ஒருவருமாக 5 ஈழத் தமிழர்கள் போட்டியிட்டிருந்தனர்.

இதில், லிபரல் கட்சியின் சார்பில் ஸ்காபுரோ குயில்ட்வூட் - ரோஜ் பார்க் தொகுதியில் போட்டியிட்ட ஹரி ஆனந்தசங்கரி, பிக்கெர்னிங் - புரூக்லின் தொகுதியில் போட்டியிட்ட ஜூனிதா நாதன் ஆகியோர் வெற்றி பெற்றனர். ஜூனிதா நாதன் முதல் தடவையாக பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளார் 11




## கனடிய பாராளுமன்ற தேர்தல் மீண்டும் லிபரல் கட்சி வெற்றி!

ரொறன்ரோ, ஏப். 30

கனடிய பாராளுமன்றத் தேர்தலில் மார்க் கார்னி தலைமையிலான லிபரல் கட்சி வெற்றி பெற்றுள்ளது. அமெரிக்காவுடனான வர்த்தக போர், இணைப்பு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இந்த லிபரல் கட்சி தொடர்ச்சியாக நான்காவது தடவையாக ஆட்சியை பிடித்துள்ளது.

கனடா பாராளுமன்றம் மொத்தம் 343 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டது. ஆட்சி அமைப்பதற்கு 172 ஆசனங்கள் தேவை என்ற நிலையில் ஆளும் கட்சியான லிபரல் 168 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. ஆட்சி அமைப்பதற்கு 4 ஆசனங்கள் போதாது. இதே நேரம், எதிர்க்கட்சியான கன்சர்வேர்ட்டிவ் கட்சி 144 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது.

வெற்றியின் பின்னர் கருத்து வெளியிட்ட பிரதமர் மார்க் கார்னி,

"தேர்தல் முடிவுகள், கனடாவை ஆதரிக்கவும் அதனை வலுவாகக் கட்டியெழுப்பவும் மக்கள் 11

## ரணிலின் சமூகவலைத் தளம் மூலமே ஜனாதிபதி தகவல்களை அறிந்தார்

### அமைச்சர் நளிந்த பதில்

கொழும்பு, ஏப். 30

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாக முடியாமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரின் சகல சமூக வலைத்தள கணக்குகளில் தகவல்களை பகிர்ந்திருக்கிறார்.

எனவே, அதனை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அறிந்திருந்தமை சாதரணமானதாகும். இது ஓர் இரகசிய தகவல் அல்ல என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையான பின்னர் கருத்து 11

## அமெரிக்கா சென்றுள்ள குழுவினர் தொடர்ந்தும் பேச்சு நடத்துகின்றனர்

### அரசாங்கம் அறிவிப்பு

• வரி பிரச்னைக்கு நீண்டகால அடிப்படையில் தீர்வு

கொழும்பு, ஏப். 30

அமெரிக்காவின் தீர்வை வரி தொடர்பான பிரச்னை குறித்துப் பேசுவதற்காக வாஷிங்டன் சென்றுள்ள இலங்கை குழுவினர் அங்கு பல தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடி வருகின்றனர். இந்தப் பேச்சுகளின் முடிவில் எவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்பது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடை பெற்றது. இதன் போதே, 11

## பட்டலந்த அறிக்கை சட்டமா அதிபரிடம்!

கொழும்பு, ஏப். 30

பட்டலந்த வதைமுகாம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் உத்தரவுக்கு அமைவாக சட்ட மா அதிபரிடம் நேற்று செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது. 11

## மின்சார கட்டணம் அதிகரிக்கப்படும்?

கொழும்பு, ஏப். 30

மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்) பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. 11

## தபால் மூல வாக்களிப்பு நேற்றுடன் நிறைவடைந்தது!

கொழும்பு, ஏப். 30

உள்ளூராட்சி சபைகள் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியுடன் நிறைவடைந்ததாக தேர்தல் ஆணையாளர் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். 11

## நாம் மக்களின் பணத்தை கொள்ளையிட மாட்டோம்!

### பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 30

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் மக்களின் பணம் கொள்ளையடிக்கப்படமாட்டாது. நாட்டின் வரலாற்றை மாற்றிய இரண்டு தேர்தல்களில் 11

## ஓய்வூதிய பிரச்னை குறித்து உயர்மட்ட கலந்துரையாடல்

கொழும்பு, ஏப். 30

ஓய்வூதியர்கள் எதிர்கொள்ளும் ஊதிய பிரச்னைகளை தீர்ப்பது தொடர்பில் நேற்று உயர்மட்ட கலந்துரையாடல் நடைபெற்றது.

ஓய்வூதியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு மற்றும் பொருளாதார 11

## அமெரிக்க வரி விவகாரம் இந்திய உதவியை நாடுக!

### ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை

கொழும்பு, ஏப். 30

இலங்கையின் உள்நாட்டு நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கத் தயார் என இந்திய பிரதமர் முன்னர் தெரிவித்திருந்தார். அமெரிக்க வரி விதிப்பு விடயத்தில் இதனை அரசாங்கம் சாதகமாக 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025ஆம் ஆண்டுக்கான திட்டங்களின் நடைமுறையில் முன்னேற்றம் இல்லை

## வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஏப். 30

2025ஆம் ஆண்டுக்கான திட்டங்களின் நடைமுறைப் படுத்தலின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட அளவில் இல்லை எனச் சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஒதுக்கப்பட்ட நிதியை ஒதுக்கிய திட்டங்களுக்கு உரிய காலப்பகுதிக்குள் செலவு செய்து முடிக்கவேண்டியது பொறுப்பு எனக் குறிப்பிட்டார்.

திட்டங்களை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தி முடிக்காமல் அதற்கு சாட்டுப்போக்குச் சொல்லவேண்டாம் எனவும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட மீளாய்வுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

நடப்பு ஆண்டின் மூன்றிலொரு காலம் நிறைவடைந்துள்ள நிலையில் திட்டங்களின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட அளவில் இல்லாமல் உள்ளது. எமது மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகச் செலவு செய்வதுடன் அடுத்த ஆண்டு அதிகளவு நிதியைக் கோரவேண்டும். அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களது தலைமைத்துவத்தில்தான் இந்தத் திட்டங்களின் நடைமுறையாக்கத்தின் வெற்றி தங்கியிருக்கின்றது.

கடந்த மீளாய்வுக் கூட்டத்தில் தெரிவித்ததைப்போல திட்டங்களின் நடைமுறையாக்கங்களை செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிடுவதுடன், இரு வாரங்களுக்கு ஒரு தடவை மீளாய்வுக் கூட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

திட்டங்களுக்கான ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்யும் போது அவதானம் தேவை. குறைந்த விலையில் கேள்வி கூறலைச் சமர்ப்பித்து ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் அதை நடைமுறைப் படுத்தாமல் விட்டுவிடுவார்கள். தவறிழைக்கும் ஒப்பந்தகாரர்களை கறுப்புப் பட்டியலில் உள்வாங்கவேண்டும் என்பதை பல தடவைகள் சொல்லியுள்ளேன். அதை நடைமுறைப் படுத்த வேண்டியது பிரதிப் பிரதம செயலாளர் - பொறியியல் சேவைகளின் பொறுப்பு. அதைச் செய்வதன் ஊடாகவே எதிர்காலத்திலாவது பிரச்னைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியும், என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ்.குகதாசன், நிதி முன்னேற்றம் தொடர்பில் ஒவ்வொரு அமைச்சுக்கள், திணைக்களங்கள் ரீதியாக தெரியப்படுத்தினார். கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு கோரிய அவர், கட்டுநிதி விடுவிப்புத் தொடர்பில் தாமதங்கள் ஏதுமில்லை எனக் குறிப்பிட்டார். அதேபோல மாகாணத்துக்கு எதிர்பார்க்கப்பட்ட வரி வருவாய் உரியவாறு காலாண்டுக்குரியது கிடைக்கப்பெற்றுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள நிலையான வைப்பு நிதியை அந்தப் பிரதேசங்களின் சிறிய அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திய ஆளுநர், வருமானம் குறைந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாகாணத்தின் நிதியை வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கலாம் என்றும் குறிப்பிட்டார். நிரல் அமைச்சுக்கள் திட்ட முன்மொழிவுகளை முன்வைத்தால் நிதியை விடுவிக்கத் தயாராகவுள்ள நிலையில் தேவையான திட்டங்களைச் சமர்பித்து நிதியைப்பெற்று நடைமுறைப்படுத்துமாறும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

இதேவேளை இந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில், வடக்கு மாகாணத்தில் தற்போது முருங்கை மற்றும் மாம்பழச் செய்கையில் ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கம் தொடர்பிலும் ஆராயப்பட்டது. அது தொடர்பில் ஆராய்ச்சிகளை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்த ஆளுநர், புதிய இனங்களை அறிமுகப்படுத்தும்போது பாரம்பரிய இனங்களை அழிவடையாமலும் பார்த்துக்கொள்வது விவசாயத் திணைக்களத்தின் பொறுப்பு எனக் குறிப்பிட்டார். (அ-05)

# கடந்த அரசுகளுக்கும் ஜே.வி.பிக்கும் எந்தவொரு வித்தியாசமும் இல்லை!

## இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 30

அரசியல் தலையீடற்ற ஆட்சியை ஏற்படுத்துவோம் என ஆட்சி அதிகாரத்தை எடுத்துக்கொண்ட இன்றைய அரசும் கடந்தகால ஆட்சியாளர்கள் போன்றே அரசியல் தலையீடுகளை செய்கின்றது என இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்ட செயலாளர் செ.சிவகுதன் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் வெகுஜன அமைப்புகளுடன் இணைந்து உழைப்பாளர் தினத்தை கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது


ஆசிரியர் மற்றும் அத்துறைசார் தரப்பினரது ஊதியம் அதிகரிப்பு, கல்வித்துறையில் அரசியல் தலையீடு இருக்க கூடாது, மக்களின் காணி நிலங்கள் விடுவிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த மேதின பேரணி எதிர்வரும் 1 ஆம் திகதி முற்பகல் இடம்பெறவுள்ளது.

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள குறித்த மேதினப் பேரணி யாழ் நகரின் பிரதான சாலைகளூடாக சென்று யாழ். பொது நூலகம் முன்பாக ஒன்று கூடி கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த பேரணியில் அனைத்து துறைசார் தரப்பினரும் ஆதரவை வழங்கி குறித்த பேரணியை வலுப்படுத்துவது அவசியம் - என்றார். (அ)

## உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறு:

# அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 30

அச்சுவேலி மத்திய கல்லூரியில் 2024 ஆம் ஆண்டு க.பொ. த உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி முதல்வர் நா. மகேந்திரராஜா தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவன் லண்டன் மாநகரில் இருந்து வருகை தந்திருந்த து. நிர்மலரோஜன், ஓய்வு நிலை அதிபர் கு.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கான பரிசில்கள், விழாவுக்கான முழு அனுசரணையையும் து. நிர்மலரோஜன் வழங்கியிருந்தார். அத்துடன் கல்லூரியின் நீண்ட நாள் தேவையாக இருந்த பிரதான மண்டபத்துக்கான ஒலியமைப்பு கருவிகளையும் சுமார் 3 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரோயல் பார்க் கொலை வழக்கு:

# ஒரு மில்லியன் இழப்பீட்டை செலுத்தி முடித்த மைத்திரி!

கொழும்பு, ஏப். 30

ரோயல் பார்க் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரதிவாதியை மன்னித்து விடுதலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கில் ஒரு மில்லியன் இழப்பீட்டுத் தொகையை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்துக்கு செலுத்தியுள்ளார்.

உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு அமைய முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தமது இழப்பீட்டுத் தொகையை செலுத்தியுள்ளார்.

ரோயல் பார்க் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜூட் ஷ்ரமந்த ஜெயமஹாவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்க முடிவு சட்டத்துக்கு முரணானது தொடுக்கப்பட்டிருந்த வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்களான எஸ். துரைராஜா, யசந்த கோடகொட மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு முன் வழக்கு விசாரணை இடம்பெற்றிருந்தது.

வழக்கு விசாரணையின் போது மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னாள் ஜனாதிபதி சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணியும் எம்.பியுமான பைசர் முஸ்தபா, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இழப்பீட்டுத் தொகை முழுமையாக செலுத்தப்பட்டதாக நீதிமன்றத்துக்குத் தெரிவித்திருந்தார்

இந்த உறுதிப்படுத்தலைத் தொடர்ந்து, வழக்கு தொடரபான மேலதிக நடவடிக்கைகளில் இருந்து மைத்திரிபால சிறிசேன விடுவிக்கப்பட்டார். (அ)

# 500 கிலோ மஞ்சளுடன் மண்டைத்தீவில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 30

மண்டைதீவு பகுதியில் 500 கிலோ மஞ்சளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட மஞ்சளை கைமாற்றும்போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைதான சந்தேக நபரை ஊர்காவற்துறை பொலிஸார் ஊடாக ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு

# முன்னாயத்த செயலமர்வு யாழ். மாவட்ட செயலகத்தில்

கொழும்பு, ஏப். 30

எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ள, உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில், மூன்றாவது கட்டமாக தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வு, யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான ம. பிரதீபன் தலைமையில் நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தலைமை உரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர், பொறுப்பாக நியமிக்கப்படும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் ஒவ்வொருவரும், வாக்களிப்பு நிலையங்களுக்குரிய முழுமையான பொறுப்பு மற்றும் அதிகாரம் கொண்டவர் இருப்பதால், சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் பங்களிப்பு, மிகவும் முக்கியமானது எனத் தெரிவித்தார்.

இதன்போது, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில், பிரதித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன் விளக்கமளித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
30.04.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இலங்கையில் நீதி

தனக்கான நீதி நிலைநாட்டப்படுமா என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தேகம் வெளியிட்டிருக்கிறார். இலங்கைத் தீவின் ஆளுமைமிக்க அரசியல் தலைவராக நோக்கப்படும் - பலமுறை பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீதி பற்றி சந்தேகம் வருகிறது என்றால், எவ்வித செல்வாக்கும் - ஆதரவும் தங்களுக்கான சட்டத்தரணிகளை அமர்த்துவதற்கே வசதியில்லாத அப்பாவி மக்களுக்கான நீதி பற்றி என்ன கூற முடியும்?

நல்லாட்சி என்று கூறப்பட்ட காலத்தில், பொங்கல் நிகழ்வு ஒன்றில் பங்குகொள்வதற்காக வடக்குக்கு வருகை தந்திருந்த ரணில் விக்கிரமசிங்கவின் கால்களைப் பற்றியவாறு ஒரு வயதான தாய் கதறும் புகைப்படங்கள் வெளியாகியிருந்தன. அப்போது, காலில் விழுந்த அந்த வயதான தாயை அவ்வாறு காலில் விழாதீர்கள் உரிமையை எவரும் யாசகம் செய்து பெற்றுவிட முடியாது என்று மேடையில் அமர்ந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் என்போர் எவருமே கூறமுற்படவில்லை. ரணிலின் காலில் விழுவதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களை சேர்ந்தவர் அதிகாரத் தரப்பின் காலில் விழுவது பற்றி எவ்வித குற்றவுணர்வுமின்றி அந்த மேடையில் அவர்கள் அமர்ந்திருந்தனர்.

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் ஆகிவிட்டன. இந்தக் காலத்தில் தமிழ்த் தேசியம் பேசிய அரசியல்வாதிகள் பல தடவைகள் - சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்வோர் இதில் அதிகமானவர்கள் அரசு சாரா நிறுவனங்களை சேர்ந்தவர்கள் என பலரும் ஜெனிவாவுக்கு சென்று வந்திருக்கின்றனர். தென்னாபிரிக்காவில் நிலைமாறுகால நீதி பற்றி கற்பதற்காக அரசுசாரா நிறுவன நிதியில் சென்றவர்கள் இருக்கின்றனர். ஜெனிவாவில் இரண்டு நிமிடங்கள் ஓர் அரசுசாரா நிறுவன பிரதிநிதியாக பேசுவதை ஓர் அரசியல் சாதனையாகக் காண்பித்துக் கொண்ட அரசியல்வாதிகள் இருக்கின்றனர். ஆனால், என்ன பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி விடயத்தில் நடந்தது என்ன? - எதுவுமில்லை.

ஆனால், பதினைந்து ஆண்டுகளில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடியவர்களில் பலர் வயது மூப்பால் இறந்து விட்டனர். இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை வெளியிலிருந்து எவரெல்லாம் பெற்றுத் தருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அந்த நம்பிக்கைகள் அனைத்தும் இப்போது அரசியல் ரீதியில் நொந்துநூலாகிவிட்டன.

இவ்வாறானதொரு பின்புலத்தில் இப்போது தென்னிலங்கையில் சக்திவாய்ந்த பதவிகளில் இருந்தவர்கள் தங்களுக்கான நீதி பற்றிப் பேசுகின்றனர். இலங்கையில் நீதி என்பது ஒரு ஒவ்வாமைச் சொல்லாகவே இருக்கிறது. இவ்வாறானதொரு நிலையில், நீதியை நிலைநாட்டுவோம் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறுகிறது. ஏனைய அரசாங்கங்களுக்கும் அநுர குமார திஸநாயக்க அரசாங்கத்துக்கும் இடையில் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. அது அநீதி மற்றும் நீதி என்னும் சொற்களுடன் பின்னிப் பிணைந்தது. அநுர குமார திஸநாயக்கவின் அரசியல் பாசறை என்பது வலிகள் நிறைந்தது. பல்லாயிரக்கணக்கான தோழர், தோழியரை அவர் இழந்திருக்கிறார். அவரின் அரசியல் குருவும் தலைவருமான ரோகண விஜயவீர எவ்வாறு குற்றுயிரில் எரியூட்டப்பட்டார் என்பதை அவரால் மறக்க முடியாது. இந்த நிலையில், நீதியை நிலைநாட்டும் ஒரு பொறுப்பு அவருக்கு உண்டு. ஆனால், அதனை ஓர் அரச தலைவராக அவரால் செய்ய முடியுமா என்பதுதான் பிரச்சனையானது. அவரின் காலத்தின் நீதியையும் பார்ப்போம்...!

# வவுனியா இரட்டைக் கொலை; கைதாகிய 5 பேருக்கு பிணை

வவுனியா, ஏப். 30

வவுனியா தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற, இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கி, வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம்.மிஹால் உத்தரவிட்டார்.

வவுனியா தோணிக்கல் பகுதியில், 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை, வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில், கணவன், மனைவி ஆகிய இருவர் மரணமடைந்திருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில், சந்தேகத்தின் அடிப்படையில் 6 பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம், குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், அவர்கள், நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன் தினம் முதலாம், மூன்றாம், நான்காம், ஆறாம், ஒம்பதாம் இலக்க சந்தேக நபர்கள் 5 பேருக்கும், நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்கப்பட்டது.

(அ)

# தானசாலைகளை பதிவு செய்ய அரசு நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 30

எதிர்வரும் வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் அமைக்கப்படும் தானசாலைகளை பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, தானசாலைகள் அமைக்கப்படும் பகுதியில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அந்த சங்கத்தின் செயலாளர் சமில் முத்துக்குட வலியுறுத்தியுள்ளார்.

குறித்த தானசாலைகளை எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவு செய்யுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலை காரணமாக, தானசாலைகள் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் சமில் முத்துக்குட சுட்டிக் காட்டியுள்ளார்.

(அ)

# மலையக ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, ஏப். 30

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த தபால் ரயில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஹாலிஎல மற்றும் பதுளை ரயில் நிலையங்களுக்கு இடையில் தடம் புரண்டதால் மலையக ரயில் மார்க்கத்தின் பதுளை - கொழும்பு கோட்டை ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி காலை 08.00 மணிக்கு பயணிக்கவிருந்த எல்ல ஒடிசி ரயில் காலை 08.50 மணிக்கும் , முற்பகல் 10.20 மணிக்கு பயணிக்கவிருந்த பல ரயில் சேவைகள் தாமதமாக பயணித்தன. (அ)

# மாக்சிச லெனினிசக் கட்சியின் மே தின பொதுக் கூட்டம் யாழில்

வடமராட்சி, ஏப். 30

பொருளாதார நெருக்கடிகளுக்கும் தேசிய இனங்களின் பிரச்னைகளுக்கும் தீர்வுகளை வலியுறுத்தி புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மே தின பொதுக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் நிம்மர் மண்டபத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வட பிராந்திய செயலாளர் கா. செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், தேசிய அமைப்பாளர் வே.மகேந்திரம், அரசியல் குழு உறுப்பினர் க.தணிகாசலம், மலையக பிராந்திய செயலாளர் டேவிட் சுரேன், பெண் விடுதலை சிந்தனை அமைப்பைச் சேர்ந்த என்.பிரசாந்தினி, பலஸ்தீன மக்கள் விடுதலை இயக்கத்தின் அமைப்பாளர் பஸ்மிர் புஹாரி, புதிய ஜனநாயக இளைஞர் முன்னணியைச் சேர்ந்த ஜிந்தீசன், பெண் விடுதலை சிந்தனை அமைப்பைச் சேர்ந்த பா.இரத்தினேஸ்வரி, கட்சியின் அரசியல் குழு உறுப்பினர். நி.பிரதீபன், புதிய ஜனநாயக இளைஞர் முன்னணியைச் சேர்ந்த கு.சாரங்கன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

மே தின கோரிக்கைகளை வலியுறுத்தி இக் கட்சியின் மே தின பேரணி அன்றைய தினம் மாலை 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் ஐந்து சந்தியிலிருந்து ஆரம்பமாகி பொதுக்கூட்டம் நடைபெறும் யாழ்.நிம்மர் மண்டபத்தை வந்தடையும்.

(அ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 30 புதன்க்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 17
நல்ல நேரம்: 9.00- 10.30
ராகு காலம்: 12.00 - 1.30
திதி : திருதியை

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள்.

**மிதுனம்**
கணவன் மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும்.

**சிம்மம்**
சொன்ன சொல்லை காப்பாற்ற துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுங்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உறவினர் நண்பர்கள் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள்.

**துலாம்**
உங்கள் பிடிவாதப் போக்கைகொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும்.

**விருட்சிகம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள்.

**தனுசு**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். அரசால் அனுகூலம் உண்டு. பழைய சிக்கலில் ஒன்று தீரும்.

**மகரம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**கும்பம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும். பயணங்களால் அலைச்சல் உண்டு. வாகனவசதிப் பெருகும்.

**மீனம்**
குடும்பத்தில் ஆதரவு பெருகும். குடும்பத்தின் பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வாகனத்தை சீர் செய்வீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

# காங்கேசன்துறை - பலாலி இடையே இ.போ.ச. பேருந்து சேவை ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஏப். 30

35 வருடங்களின் பின்னர் காங்கேசன்துறை - பலாலி இடையே இ. போ. ச. பேருந்து சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யுத்தம் காரணமாக கடந்த 35 வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட குறித்த பகுதியூடாக பொது மக்கள் நடமாட முடியாத சூழல் காணப்பட்டது.

இதன் காரணமாக பயணிகள் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வரை மாத்திரமே பயணம் செய்து வந்தனர்.

இந்த நிலையில், கடந்த 10ஆம் திகதி நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்ட பலாலி வீதி வரை நேற்றைதினம் பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.

பேருந்து சேவை நேர அட்டவணை தொடர்பாக பின்னர் அறியத்தருவதாக பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா, இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் ஜீவக புரசிங்க மற்றும் போக்குவரத்து சபை ஊழியர்கள் கலந்து கொண்டனர். (எ)

உள்ளூராட்சி தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள

# உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு யாழ்ப்பாணத்தில் முன்னாயத்த செயலமர்வு



யாழ்ப்பாணம், ஏப். 30

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தொடர்பில் வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுக்கள் மற்றும் ஆவணங்கள் விநியோகித்தல் மற்றும் பாரமெடுத்தல் கடமையில் ஈடுபடவுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வு, யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் கருத்து தெரிவித்த தெரிவத்தாட்சி அலுவலர், எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் தொடர்பில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைக்கப்படவுள்ள 35 நிலையங்களிலிருந்து 517 வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுக்கள் அதற்குரிய ஆவணங்களையும் விநியோகிக்கும் மற்றும் பாரமெடுக்கும் நிலையமாக செயல்படவுள்ளது.

அந்த நிலையங்களுக்கு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமிக்கப்படும் அலுவலகர்களின் பங்களிப்பானது மிகவும் முக்கியத்துவமானது எனத் தெரிவித்தார். மேலும், மே 05 ஆம் திகதி அன்று காலை 07. 00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு சமுகமளித்து வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு உரிய வகையில் வாக்குப் பெட்டிகளையும் ஆவணங்களையும் கையளிக்கும் அதேவேளை 06 ஆம் திகதி மாலை 05.00 மணியிலிருந்து வாக்களிப்பு நிறைவடைந்த பின்னர் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் கையளிக்கப்படவுள்ள வாக்குப் பெட்டிகளையும் ஆவணங்களையும் உரிய வகையில் பெற்றுக்கொள்வதில் மிக வினைத்திறனாக செயல்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இத்தேர்தல் சிறப்பாக நடைபெற அனை வரும் ஒருங்கிணைந்து செயல் பட்டு நீதியாகவும், சுதந்திர மாகவும் தேர்தல் நடைபெற சிறப்பான ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொண் டதுடன், நடைபெற்று முடிந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நீதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்காக தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்தச் செயலமர்வில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலனால் வாக்குப் பெட்டி விநியோகித்தல் மற்றும் பாரமெடுத்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இச் செயலமர்வில் களஞ்சியத்துக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரான பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரனும் கலந்து கொண்டார்.

(எ-05)


# நான்கு வாள்கள், கஞ்சாவுடன் மாதகலில் மூவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதகல் பகுதியில் கஞ்சா மற்றும் நான்கு வாள்களுடன் நேற்று முன்தினம் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 2 கிலோ 600 கிராம் கஞ்சாவும், நான்கு வாள்களும் மீட்கப்பட்டன.

சந்தேகநபர்கள் மூவரும் இளவாலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப் படுகின்றனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை களை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ரூபாவுக்கு உப்பை வழங்க நடவடிக்கை!

## அரசாங்கம் அறிவிப்பு



**கொழும்பு, ஏப். 30**

**ஒரு கிலோ உப்பின் உற்பத்திச் செலவு 25 ரூபாய் எனவும், தற்போது சந்தையில் 180 ரூபாவுக்கு உப்பு விற் பனை செய்யப்படுவதாகவும் அமைச்சர் சுனில் ஹதுன்னெத்தி தெரிவித்துள்ளார்.**

உப்பை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டார்.

முவன்கல மற்றும் உக்சிரிபுர பிரதேசங்களில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சந்தையில் சீனி விற்பனை தற்போது ஐந்து வணிகர்களின் உயர்ந்துள்ளது.

எனவே, உள்நாட்டுச் சந்தையில் சீனி விற்பனை சாத்தியமில்லாத பட்சத்தில், அதனை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்த அதிகாரத்தை ஒழித்து, சர்க்கரை தொழிற்துறையை மேம் படுத்தும் நடவடிக்கைகள் எடுப்போம்.

ஹிகுரான கல்ஓய சர்க்கரை தொழிற்சாலை 51 வீதம் அரசாங்கத்திற்கு சொந்தமானதாயினும், அதன் உரிமை அரசால் பயன்படுத்தப்படவில்லை.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பாக இன்னும் அந்த நிறுவனத்துக்கு நேரடி அழுத்தம் வழங்கப்படவில்லை என்றாலும், சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்- என்றார். (அ)

# பட்டாசை வாயால் கடித்த பல் வைத்தியர் படுகாயம்!

கொழும்பு, ஏப். 30

சீனப் பட்டாசு ஒன்றை கடித்த பெண் பல் வைத்தியர் ஒருவர் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் பாணந்துறையின் வேகட பகுதியில் உள்ள அரச வைத்தியசாலையில் பணிபுரியும் பல் வைத்தியர் என பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த வைத்தியரின் மகன் அருகிலுள்ள ஒரு கடையில் இருந்து சீனப் பட்டாசுகளை வாங்கி, அவற்றில் சிலவற்றை வீட்டின் வரவேற்பறையில் உள்ள மேசையில் வைத்திருந்துள்ளான்.

இது தொடர்பில் சரியான புரிதல் இல்லாமல், பல் வைத்தியர் அதை பரிசோதிக்க தனது பற்களால் கடித்த தாகவும், இதனால் அது வெடித்து பலத்த காயங்கள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பட்டாசு அவரது வாயில் வெடித்ததால், அவரது வாய், முகம் மற்றும் பற்களில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

படுகாயமடைந்த வைத்தியர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது.

# ஆசிரியை தாக்கியமையால் மாணவி வைத்தியசாலையில்

கொழும்பு, ஏப். 30

கம்பளை பகுதியில் உள்ள ஒரு பாடசாலையின் ஆசிரியை, தனது புத்தகப் பையிலிருந்து கணிதப் புத்தகத்தை எடுக்க தாமதமானதால் கோபமடைந்து, பத்தாம் வகுப்பு மாணவி ஒருவரை தடியால் தாக்கினார். இதனால், மாணவியின் கண்ணில் காயம் ஏற்பட்டதால், கம்பளை போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

புஸ்ஸல்லாவை, ரோச்சைல்ட் தோட்டத்தில் வசிக்கும் அவரது தாயார் கே.மகேஸ்வரி இது தொடர்பாக புஸ்ஸல்லாவை பொலிஸில் முறைப்பாடு அளித்துள்ளார்.

புகாரின்படி, மாணவி வகுப்பில் கணிதப் பாடத்திற்குத் தயாராகிக் கொண்டிருந்ததா கவும், தனது பையில் இருந்த பெரிய புத்தகங்களுக்கிடையில் இருந்து கணிதப் புத்தகத்தைக் கண்டு பிடித்து வெளியே எடுப்பதில் தாமதமாகிவிட்ட தாகவும் கூறப்படுகிறது. இதனால் கோபமடைந்த கணித ஆசிரியை, ஒரு தடியால் மாணவியின் கையில் அடித்தார்.

அது மாணவியின் கண்ணில் பட்டது. கண் சிவந்து வீங்கியிருந்ததால், ஆசிரியர் அந்த மாணவியை வெதுவெதுப்பான நீரில் கழுவிவிட்டு வகுப்பில் உட்காரச் சொல்லியிருந்தார்.

அதே நேரத்தில், ஆசிரியர் வகுப்பறையை விட்டு வெளியேறிவிட்டார். வேதனையால் துடிதுடித்த மாணவியைப் பார்த்த வகுப்பு ஆசிரியர், நோயின் தீவிர நிலையைக் கண்டு, மற்றொரு ஆசிரியர் கொடுத்த பணத்தை எடுத்துக் கொண்டு, மாணவியை ஓட்டோவில் ஒரு தனியார் மருந்தகத்துக்கு அழைத்துச் சென்றார்.

ஆசிரியர்கள் ஏற்கனவே மாணவியிடம் பேசியிருந்ததால், மாணவி தடியால் தாக்கப்பட்டதாகக் கூறவில்லை. தரையில் விழுந்ததால் அவளுடைய கண் சேதமடைந்துள்ளது என்று கூறி, சிகிச்சை பெற முயன்றனர்.

ஆனால் அந்த மருந்தகத்தனர், மாணவியை அரச மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்படி கூறினர். இதற்கிடையில், சம் பவம் குறித்து அறிந்த மாணவி யின் தாய், புஸ்ஸல்லாவை பொலிஸாருக்கு தகவல் அளித் ததை அடுத்து, பொலிஸார் தலையிட்டு மாண வியை கம்பளை போதனா மருத்து வமனைக்கு அனுப்பி வைத்தனர். (அ)

### துப்பாக்கிச்சூட்டுடன் தொடர்புடையவர் ஹெறோயினுடன் கைது


கொழும்பு, ஏப். 30

அஹூங்கல்ல பகுதியில் ஏப்ரல் 17 ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்பு டைய சந்தேக நபர் ஒருவர் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

லேலிஹெத்துவ சந்திக்கு அருகில் 6 கிராம் 826 மில்லி கிராம் ஹெரோயினு டன் இந்த சந்தேக நபர் கைது செய்யப் பட்டார்.கைது செய்யப்பட்டவர், 28 வயதுடைய ஊரகஸ்மன்ஹந் திய பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

இவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், கடந்த ஏப்ரல் 17ஆம் திகதி அ/ஹங்கல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில், ஒருவரை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்ய முயற்சித்த குற்றச் சம்பவத்தில், இந்த சந்தேக நபர் துப்பாக்கிதா ரியாக செயல்பட்டவர் என்பது தெரியவந்துள்ளது.

# மத்திய வங்கி நிதியியல் அறிக்கை ஜனாதிபதியிடம்



கொழும்பு, ஏப். 30

இலங்கை மத்திய வங்கியின் 2024ஆம் ஆண்டுக்கான நிதியியல் அறிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான அறிக்கையை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் கையளித்தார்.

அத்துடன் அறிக்கையின் பிரதியொன்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவினால் ஜனாதிபதி செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க விடமும் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் சிலரும் கலந்துகொண்டனர். (அ)

# முத்துராஜா யானையை மீளவும் இலங்கைக்கு வழங்க முடியாது!

கொழும்பு, ஏப். 30

2023 ஆம் ஆண்டு தாய்லாந்தினால் பொறுப்பேற்கப்பட்ட முத்துராஜா யானையை இலங்கைக்கு மீண்டும் வழங்காதிருக்க அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த யானை தாய்லாந்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டு கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில், மீண்டும் தாய்லாந்து அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது.

அளுத்கம, கந்த விகாரையில் பாதுகாப்பில் இருந்த போது ஏற்பட்ட காயங்களினால் இந்த யானை தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் பராமரிப்பில் வைக்கப்பட்டது. பின்னர் முத்துராஜா யானை 2023 ஆம் அண்டு தாய்லாந்துக்கு சிகிச்சைக்காக திருப்பி அனுப்பப்பட்டது.

இந்த நிலையில் முத்துராஜா யானையை இலங்கைக்கு மீண்டும் வழங்காதிருக்க தாய்லாந்து அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும் இலங்கைக்கு வழங்கப்பட்ட மற்ற யானைகள் குறித்தும் தாய்லாந்து அரசாங்கம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பொருளாதார மையமாக ஜனாதிபதி மாளிகைகள்!

கொழும்பு, ஏப். 30

நாடளாவிய ரீதியில் ஜனாதிபதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள 9 சொகுசு பங்களாக்களில் இரண்டை மாத்திரம் வைத்துக் கொண்டு ஏனைய பங்களாக்களை பொருளாதார ரீதியில் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சர் கலாநிதி சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த பங்களாக்கள் தொடர்பாக தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேற்படி,

ஜனாதிபதி மாளிகைகளை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு தரப்பிலிருந்தும் பத்துக்கும் மேற்பட்ட வேண் டுகோள்கள் முன்வைக்கப்பட் டுள்ளதாகவும் இது தொடர்பாக உரிய கவனம் செலுத்தப் பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதன்படி, யாழ்ப்பாணத்தில் காணப்படும் ஜனாதிபதி மாளிகை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உபயோகத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள நிலையில், நுவரெலியாவில் காணப்படும் ஜனாதிபதி மாளிகையை சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக ஈடுபடுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மற்றும் கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகைகளை மாத்திரம் விசேட உற்சவங்களுக்கு பயன்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் வெளிநாட்டு அரச தலைவர்கள் நாட்டுக்கு வருகை தரும் சந்தர்ப்பங்களில் அவர்களை வரவேற்பதற்கும் சந்திப்புகளை மேற்கொள்வதற்கும் அந்த ஜனாதிபதி மாளிகைகள் தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர், கண்டி பெரஹெர நிகழ்வுகளை சம்பிரதாயமாக நிறைவேற்றுவதற்காக கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகை அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி செயலக நிர்வாகத்தின் கீழ் கொழும்பு, கண்டி, நுவரெலியா, மஹியங்கனை, அநுராதபுரம், கதிர்காமம், யாழ்ப்பாணம், எம்பிலிப்பிட்டி மற்றும் பெந்தோட்டை பிரதேசங்களில் ஜனாதிபதி மாளிகைகள் காணப்படுவ தாகவும் கொழும்பு மற்றும் கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகைகள் தவிர்ந்த ஏனைய ஜனாதிபதி மாளிகைகள் தொடர்ச்சியாக பயன்படுத்தப் படவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை போக்குவரத்துச் சபை முன்னாள் பிரதித் தலைவர் கைது!

கொழும்பு, ஏப். 30

இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னாள் பிரதித் தலைவர் எல்.ஏ. விமலரத்ன குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டார்.

கதிர்காமத்தில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்திற்குச் சொந்தமானதாகக் கூறப்படும் வீடு தொடர்பான விசாரணைகளில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் பிரகாரம் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# மூன்றாவது வெற்றியை நாம் பெறுவதில் சந்தேகம் இல்லை!

## பிரதமர் ஹரிணி உறுதி



கொழும்பு, ஏப். 30

**மூன்றாவது வெற்றியை தாம் பெறுவதில் சந்தேகமில்லை என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக்கூட்டம் தெமட்டகொடை பகுதியில் இடம்பெற்றது. அதன்போதே அவர் இதனை தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-மே 6 ஆம் திகதி வெற்றிகரமான பயணத்தின் மூன்றாவது வெற்றியை நாம் பெறுவோம் என்பதில் சந்தேகமில்லை. திருடர்கள் இல்லாத ஒரே தளம் என்றால் அது எம்முடைய தளமாகும்.முதல் வரவு-செலவுத் திட்டத்தில், இந்த பகுதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

மக்கள் சுதந்திரமாக வாழவும் சரியானதை தேர்வு செய்யவும் ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும்.மாற்றத்திற்கான மூன்றாவது படி நாம் எடுக்கவேண்டும்.

குற்றச்செயல்கள் அதிகளவில் இடம்பெறுவதற்கு அரசியல் செல்வாக்கு கடந்த காலங்களில் காணப்பட்டமையே காரணமாகும். அதன் காரணமாகவே குற்றச்செயல்கள் அதிகரிக்க ஆரம்பித்தன.

அதன் ஊடாகவே போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் சுதந்திரமாக செயற்படுகின்றனர். ஆனால் நாம் தற்போது இத்தகையோருக்கு அரசியல் செல்வாக்கை வழங்கப்போவதில்லை. சட்டம் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சட்டத்தை மீறினால் அனைவருக்கும் சமமாக சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

தேசிய மட்டத்தில் நாம் மேற்கொண்ட மாற்றத்தை உரியவாறு செயற்படுத்த தேவையாக உள்ளூராட்சி மன்றங்கள் எமக்கு அவசியம். அதன் ஊடாகவே வளமான நாடு அழகான வாழ்க்கையை பெறமுடியும்-என்றார். (அ)

# தேங்காயின் விலை மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 30

நாட்டில் தேங்காயின் விலை சில பிரதேசங்களில் மீண்டும் அதிகரித்துள்ளதாக தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் சுனிமல் ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

180 ரூபாவுக்கு விற்கப்பட்ட தேங்காய் தற்போது 220 ரூபாய் முதல் 240 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் , மே மற்றும் ஜூன் மாதங்களில் நாட்டில் தேங்காய் அறுவடை 500 மில்லியனை தாண்டும் என்று தென்னை ஆராய்ச்சி நிறுவனம் கணித்துள்ளது.

அவ்வாறாயின் தேங்காயின் விலை மீண்டும் குறைவடையும் என்று தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (அ)

# எவ்.பி.ஐ. கண்டுபிடிப்புகளை நிராகரித்தால் அமெரிக்கா நிச்சயம் எதிர்வினையாற்றும்!


## முன்னாள் ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 30

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான அமெரிக்க புலனாய்வுப் பிரிவின் (எவ்.பி.ஐ.) கண்டுபிடிப்புகளை இலங்கை நிராகரித்தால் வொஷிங்டன் எதிர்மறையாக பதிலளிக்கக்கூடும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

இசைக்கலைஞர் இராஜ் வீரரத்ன மற்றும் பொதுஜன பெரமுனவின் அரசியல்வாதி மிலிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் ஒரு நேர்காணலின்போது பேசிய ரணில் விக்கிரமசிங்க, தாக்குதல்களுக்குப் பின்னால் சஹ்ரான் ஹாஷிம் தான் மூளையாக செயல்பட்டார் என்று எவ்.பி.ஐ. விசாரணையில் முடிவு செய்யப்பட்டதாக கூறினார்.

இந்த நிலையில், தாக்குதல் குறித்து இலங்கை வேறுபட்ட கதையை ஊக்குவிக்க முயன்றால், அது அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை கோபப் படுத்தக்கூடும் என்றும், அவர் அதிக வரிகளை விதிப்பதன் மூலமோ அல்லது தனது பதவிக் காலத்தில் உக்ரைனின் தலைமையை நடத்தியது போன்ற இராஜதந்திர நடவடிக்கை எடுப்பதன் மூலமோ எதிர்வினையாற்றக்கூடும் என்றும் அவர் கூறினார்.



உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் ஜனாதிபதி ட்ரம்ப், தன்னுடன் தனிப்பட்ட முறையில் பேசியதாகவும், விசாரணைகளுக்கு உதவ எவ்.பி.ஐ. நியமித்ததையும் ரணில் விக்ரமசிங்க இதன்போது நினைவு கூர்ந்தார். (அ)

# பயணிகள் போக்குவரத்து முறையை நவீனப்படுத்துவதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு, ஏப். 30

இலங்கையின் பயணிகள் போக்குவரத்து முறையை மேம் படுத்துவதற்கும் நவீனப்படுத் துவதற்கும் பல முக்கிய தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, தேசிய போக்குவரத்து ஆணை யகம், இலங்கை போக்குவரத் துச் சபை மற்றும் ஒன்பது மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபைகளின் தலைவர்களுடன் விசேட கலந்துரையாடலில் பங்கேற்றார்.

இந்த கலந்துரையாடலின்போது தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

எட்டப்பட்ட தீர்மானங்களை செயல்படுத்துவது தொடர்பான முதற்கட்ட பணிகளை உடனடியாக தயாரிக்கவும், இந்த தீர்மானங்களை செயல்படுத்துவது தொடர்பான முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிக்கவும் அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (அ)

# சர்வதேச சந்தையில் இலங்கை ரூபாயின் பெறுமதியில் வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 30

இந்த ஆண்டில் இலங்கை ரூபாய் 2.2 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என புளூம் பேர்க் சந்தைத் தரவுகள் தெரிவிக்கின்றன.

சர்வதேச சந்தையில் எழுச்சி பெறும் 30 நாட்டு நாணயங்களில் 26 ஆவது இடத்தில் இலங்கை உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நாணயங்களில் 23 நாணயங்கள் இதுவரை வலுவடைந்துள்ளன.

ரஷ்ய ரூபிள் முதலிடம் பிடித்துள்ளது, ஹங்கேரியன் போரின்ட் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இலங்கை ரூபாயுடன் சேர்த்து மொத்தம் ஏழு நாணயங்கள் இந்த ஆண்டில் இது வரை மதிப்பை இழந்துள்ளன.

இறக்குமதி தேவைகள் அதிகரித்தல் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப் பட்டதன் விளைவினால் வர்த்தகச் சுழற்சி விரிவாகி, இந்த நிலை ஏற்பட்டுள்ளது. (அ)

# ஜனநாயக விரோதக் கருத்துக்களை வெளியிடுகின்றார் ஜனாதிபதி அநுர!

## ஹர்ஷண ராஜகருணா குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 30

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உள்ளூராட்சி மன்ற தேர்தல் குறித்த ஜனநாயக விரோத கருத்துக்களை தெரிவித்துவருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான தயார்படுத்தல்கள் சூடு பிடித்துள்ளன. இத்தகைய பின்னணியில் ஐக்கிய மக்கள் சக்தியினர் வெற்றியடையக்கூடிய வகையிலான மாற்றமொன்று குறுகிய காலத்திற்கும் இடம்பெற்றுள்ளது.

இதன் காரணமாக உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பில் ஜனாதிபதியும் கூட குழப்பமடைந்துள்ளனார். ஆகவே வாக்களிக்கவில்லையாயின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதியை ஒதுக்க முடியாது என்றவாறாக மிரட்டலை ஜனாதிபதி விடுக்கின்றார். இது ஜனநாயக விரோதக்கருத்தாகும். ஜனாதிபதி இவ்வாறு ஜனநாயக விரோதமாக நடந்து கொள்வதற்கு கண்டனம் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். தேர்தல் காலத்தில் இத்தகைய விடயங்கள் இடம் பெறும் போது அது எமக்கு அச்சுறுத்தலை தோற்றுவிக்கும் விடயமாக அமைந்துள்ளது-என்றார். (அ)

# பொருளாதார கணக்கெடுப்பை 2025, 2026 இல் நடத்த தீர்மானம்

கொழும்பு, ஏப். 30

பொருளாதாரக் கணக்கெடுப்பு 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் நடாத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2013ஃ2014 ஆம் ஆண்டில் குடிசன மதிப் பீடு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தால் இறுதியாகப் பொருளாதாரக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த கணக்கெடுப்பில் திரட்டப்பட்ட தரவுகளை காலத்தோடு தழுவியதாக இற்றைப்படுத்துவதற்காக விவசாயம் மற்றும் விவசாயம் சாராத பொருளாதாரச் செயற்பாடுகளை வேறு வேறாக இரண்டு கட்டங்களாக உள்ளடக்கும் வகையில் திணைக்களத்தால் 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் பொருளாதாரக் கணக்கெடுப்பை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டில் விவசாய நடவடிக்கைகள் மற்றும் 2026 ஆம் ஆண்டில் விவசாயம் சாராத நடவடிக்கைகளைக் கணக்கெடுப்புக்கு உள்ளடக்கும் வகையில் பொருளாதாரக் கணக்கெடுப்பு 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் நடத்துவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உர இறக்குமதியில் ஊழல் தகவல் வெளியிடத் தயார்!

## விவசாய ஒற்றுமை அமைப்பு

கொழும்பு, ஏப். 30

**உர இறக்குமதியின்போது ஊழலில் ஈடுபட்ட மேலும் பலர் தொடர்பிலான தகவல்களை ஆதாரங்களுடன் வெளிப்படுத்தத் தயார் என தேசிய விவசாய ஒற்றுமை அமைப்பின் தலைவர் அநுராத தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தரமற்ற உர இறக்குமதி குறித்து நாம் தொடர்ச்சியாக எதிர்ப்பைத் தெரிவித்து வந்தோம். ஆயினும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்த ஊழலில் தொடர்புடைய மகேஷ் கம்மன்பில கைது செய்யப்பட்டுள்ளார். இதனை நாம் வரவேற்கிறோம். இவர் உள்ளிட்ட இன்னும் பலர் இந்த ஊழலுடன் தொடர்புபட்டிருக்கிறார்கள். இந்த விடயங்களை நாம் ஆதாரத்துடன் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ளோம்.

இது பாரிய ஊழலாகும். நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு பிரதான காரணங்களில் இதுவும் ஒன்று. இந்த ஊழலுடன் தொடர்புடைய மேலும் பலர் மாகாண செயலாளர்களாக தற்போதைய அரசாங்கத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் அமைச்சுகளில் முக்கிய பதவிகளை வகிக்கின்றனர்.

இவ்வாறானவர்களாலேயே நாட்டு மக்கள் இன்னலுக்கு முகங்கொடுக்க வேண்டி வந்தது. ஆதலால் எம்மிடமுள்ள மேலும் பல ஆதாரங்களை வெளிப்படுத்த தயாராக இருக்கிறோம். அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறோம்-என்றார். (அ)

# 1.15 மில்லியனை விஞ்சிய அரசதுறை வேலைவாய்ப்பு!

கொழும்பு, ஏப். 30

இலங்கையில் உள்ள அனைத்து பொது மற்றும் அரை அரசு துறை நிறுவனங்களிலும் ஊழியர்களின் எண்ணிக்கை 1,156,018 ஐ கடந்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள சமீபத்திய தரவுகளின்படி, இலங்கையில் உள்ள அனைத்து பொது மற்றும் அரை அரசு துறை நிறுவனங்களிலும் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டுக்குள் 1,156,018 ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.இது 2016 ஆம் ஆண்டு கணக்கெடுப்புடன் ஒப்பிடும்போது 46,543 அதிகமாகும்.

அவர்களில், வேலை செய்யும் ஆண்களின் விகிதம் 50.5 வீதம் ஆகும்.இது பெண்களை விட (49.5 வீதம்) சற்று அதிகம்.

பெரும்பாலான ஊழியர்கள் மத்திய அரசில் உள்ளனர், மொத்த பணியாளர்களில் 59.5 வீதம் பேர் இதில் அடங்குவர்.

இருப்பினும், மத்திய அரசுடன் ஒப்பிடும்போது மாகாண அரசாங்கத்தில் அதிக விகிதத்தில் பெண்கள் பணிபுரிவதாக அறிக்கை மேலும் சுட்டிக்காட்டுகிறது.

மாகாண அரசுத் துறையில் பெண் ஊழியர்கள் ஆண்களை விட இரண்டு மடங்கு அதிகமாக உள்ளனர்.

இதற்கிடையில், இந்த ஊழியர்களில் சுமார் 97 வீதம் பேர் நிரந்தரப் பதவிகளை வகிக்கின்றனர் என்றும், 3.7 வீதம் பேர் மட்டுமே தற்காலிக அல்லது ஒப்பந்த அடிப்படையிலான வேலைவாய்ப்பு போன்ற நிரந்தரமற்ற வகைகளில் உள்ளனர் என்றும் தரவு காட்டுகிறது.(அ)

# இரண்டு பஸ்கள் மோதிய விபத்தில் 30 பேர் காயம்!

கொழும்பு, ஏப். 30

பெலியத்தை, ஹெட்டியாராச்சி பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

திக்வெல்லவிலிருந்து பெலியத்தை நோக்கிச் சென்ற தனியார் பஸ், எதிர் திசையில் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸ/டன் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த பயணிகள் தங்காலை மற்றும் பெலியத்தை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.பெலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மே 3 ஆம் திகதி நள்ளிரவுடன் தேர்தல் பிரசாரம் முடிவடையும்

கொழும்பு, ஏப். 30

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் அனைத்து பிரசார நடவடிக்கைகளும் மே 3ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடையுமென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, மே 3ஆம் திகதி முதல் தேர்தல் நடைபெறும் நாள் வரை அமைதி காலம் அமுலில் இருக்கும் எனவும், அக்காலப்பகுதியில் பிரசார நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியாது எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று வரை வீடு வீடாகச் சென்று உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

நேற்றைய தினத்துக்கு பின்னர் வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் இந்த மாதம் 30 ஆம் திகதிக்குப் பின்னர் தங்கள் பகுதியில் உள்ள உப தபால் அலுவலகத்திற்குச் சென்று தமக்கான வாக்காளர் அட்டைகளை பெற்றுக் கொள்ளலாம்.

இம்முறை உள்ளூராட்சித் தேர்தலின் போது வாக்களிக்கும் போது சுண்டு விரலைப் பயன்படுத்த தேர்தல் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது என சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ)

# வாகனங்களுக்கு ஏற்பட்ட கேள்வி குறையவில்லை!

கொழும்பு, ஏப். 30

வாகனங்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றுக்கான கேள்வி குறையவில்லை என என வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் இறக்குமதிக்கான அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னர் சுமார் ஏழாயிரம் வானங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றில் 75 வீதமானவை விற்பனையாகியுள்ளன.

வாகனங்களின் விலைகளில் அதிகரிப்பு காணப்படுகிறது. ஏனென்றால் அவற்றுக்கான வரி திருத்தம் மேற்கொள்ளப்பட்டமையே அதற்குக் காரணமாகும். எனினும் புதிய வாகனங்களை கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வமாக இருக்கின்றனர்.

நாட்டில் ஐந்து வருடங்களாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவில்லை. அதனால் தம்மிடமுள்ள பழைய



வாகனங்களை விற்பனை செய்துவிட்டு புதிய வாகனங் களை கொள்வனவு செய்ய பெரும்பாலானோர் விரும்பு கின்றனர்.

இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் அனைத்தும் காட்சியறைகளில் அவ்வாறே காணப்படுவதாக வெளியாகியுள்ள செய்திகளில் உண்மையில்லை.

வாகன இறக்குமதி கொழும்பு துறைமுகத்திலும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திலும் வாராந்தம் இடம்பெறுகின்றன.

வாகனங்களின் விலை சர்வதேச சந்தையிலும் அதிகரித்துள்ளது.சிறிய வாகனங்களின் விலை நாம் எதிர்பார்த்ததை விட உயர்வடைந்துள்ளது. குறிப்பாக சிறிய வாகனங்களின் ஆரம்ப விலை 70 இலட்சம் ரூபாவாக காணப்படுகிறது. எனினும் வாகனங்களுக்கான கேள்வி குறையவில்லை-என்றார். (அ)

# பாணந்துறையில் சூடு!

## ஒருவர் உயிரிழப்பு!!

கொழும்பு, ஏப். 30

பாணந்துறை, ஹிராண பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

ஹிராண பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்துபசார நிகழ்வில் நேற்று அதிகாலை இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இரு நபர்கள் துப்பாக்கிச் சூட்டை முன்னெடுத்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்தனர்.

அவர்கள் இருவரும் பாணந்துறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மேற்கு மாலமுல்ல பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுக்கு வு-56 துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# அரிசியை இறக்குமதி செய்ய பேச்சுக்களில் ஈடுபடும் அரசு!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 30

அரிசியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கான பேச்சுக்களில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

களுத்துறை, தொடங்கொடவில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதாக அரசாங்கம் உறுதியளித்திருந்தது. எனினும் அவ்வாறானதொரு செயற்பாடு முன்னெடுக்கப்படவில்லை.

உரத்துக்கு மானியம் வழங்கப்படுவதாக அமைச்சர்கள் கூறுகின்றபோதிலும் அதில் உண்மையில்லை.

அவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதற்கு பதிலாக அரசி இறக்குமதியாளர்களுடன் விவசாய அமைச்சர் பேச்சுவார்த் தைகளை முன்னெடுத்துள்ளார்.

அரிசியை இறக்குமதி



செய்வதற்கான பேச்சுவார்த்தை இடம்பெ றுகிறது. இந்த போகத்தில் போதியளவு அரிசி விளைச்சல் கிடைக்காது என அரசாங்கம் அறிந்துள்ளது.

விவசாயிகளை நிர்க்கதிக்கு உள்ளாக்கிவிட்டு வர்த்தகர்களுக்கு ஆதாயம் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

கிராமங்களின் அதிகாரத்தை தேசிய மக்கள் சக்தியினர் இப்போது கேட்கிறார்கள். மகிந்த ராஜபக்ஷ கிராமங்களில் அபிவிருத்திகளை முன்னெடுத்தபோது எம்மை விமர்சித்தார்கள்.

அந்த அபிவிருத்தியில் சிறிய பங்களிப்பையேனும் வழங்காதவர்கள் இன்று அதிகாரத்தைக் கேட்பது கேலிக்குரியது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகர வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

அக்கரைப்பற்று, ஏப். 30

அக்கரைப்பற்று மாநகர சபையால் வர்த்தகர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசேட விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஹல்லாஜ் மண்டபத்தில் அக்கரைப்பற்று மாநகர சபை ஆணையாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் எம்.அன்சார், பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.சலீம், நுகர்வோர் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களான எம். சாஜித், எம். நிபாஜ் மற்றும் அக்கரைப்பற்று வர்த்தகர் சங்கத்தின் நிர்வாகிகள் உட்பட பல வர்த்தகர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது, அக்கரைப்பற்று மாநகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்களும் வியாபார அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய ஆணையாளர், வர்த்தகர்களுக்கு இதனை இலகுபடுத்தும் பொருட்டு அடுத்த வாரமளவில் தமது மாநகர சபையால் நடமாடும் சேவை ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் இதன்போது ஆதன வரி உள்ளிட்ட சேவைக் கட்டணங்களுடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்து, வியாபார அனுமதிப் பத்திரங்களை இலகுவாகவும் துரிதமாகவும் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெளிவுபடுத்தினார்.

மேலும், திண்மக்கழிவகற்றல் சேவையை வினைத்திறனுடன் இன்னும் சிறப்பாக முன்னெடுப்பதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதற்கு வர்த்தகர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வர வேண்டும் எனவும் ஆணையாளர் நௌபீஸ் வலியுறுத்தினார்.

இதேவேளை, நுகர்வோர் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர் எம். சாஜித், வர்த்தகர்களுக்கான விழிப்புணர்வு விரிவுரையொன்றை நிகழ்த்தினார்.

இதன்போது, பொருட்களின் விலைகளை காட்சிப்படுத்தல், அவற்றின் உற்பத்தி, தரம் மற்றும் காலாவதி உள்ளிட்ட விடயங்களில் நுகர்வோர் அதிகார சபையின் சட்டங்கள், ஒழுங்கு விதிகள் தொடர்பாக தெளிவுபடுத்தி, அறிவுறுத்தல்களை வழங்கிய அவர், தமது வியாபார நடவடிக்கைகளின் போது வர்த்தகர்கள் இவற்றை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தியதுடன் தவறும் வர்த்தகர்கள் மீது எவ்வித தயவுமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (எ)

# தேர்தல் முறைப்பாடுகளுக்கு தீர்வுகாண பொலிஸ் அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு



திருகோணமலை, ஏப். 30

**எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான முறைப்பாடுகளை தீர்ப்பது குறித்து உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.**

இந்த விழிப்புணர்வு செயலமர்வானது தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்கவின் தலைமையில் நடைபெற்றது. தற்போதைய உள்ளூராட்சி முறைமையின் தனித்துவமான அம்சங்கள் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் விளக்கமளித்தார்.

இதன்போது, பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய, நிகழ்நிலை மூலம் இணைந்து கொண்டு உரையாற்றினார்.

தேர்தல்களின் போது பொலிஸ் அதிகாரிகளின் பொறுப்புக்கள் குறித்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தினேஷ் கருணாநாயக்கவும் பொலிஸ் திணைக்களத்தின் சட்ட பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகரவும் தேர்தல் சட்ட விதிகள் குறித்து விளக்கமளித்தனர்.

தேர்தல் சட்டம், தேர்தல் பிணக்குகள், முகாமைத்துவ மையம் மற்றும் பொலிஸ்துறையின் பொறுப்பு, தேர்தல் செலவின ஒழுங்குமுறை, பிரசார அலுவலகங்கள் மற்றும் பிரசார கட்டுப்பாடுகள் குறித்த தகவல்களை மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம், விசாரணை மற்றும் திட்டங்கள்) பி. பீ. சி. குலரத்னவால் தெளிவூட்டப்பட்டன.

மேலும், பொலிஸ் அதிகாரிகளின் தேர்தல் கடமைகள் குறித்த விரிவுரையானது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்கவால் நிகழ்த்தப்பட்டன.

இதன்போது திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான ஜி.எம். ஹேமந்த குமார, திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ். சுதாகரன், திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.கே.டி நிரஞ்சன், பொலநறுவை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் மற்றும் பிரதேச பொலிஸ் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (எ)

# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் சாய்ந்தமருதில் முன்னெடுப்பு!

சாய்ந்தமருது, ஏப். 30

கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அடை மழைக்கு பின்னர் தொடர்ச்சியாக நேற்று முதல் டெங்கு களத்தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. டெங்கு நுளம்பு பரவக்கூடிய அபாயம் காணப்படுவதால் இப்பிரதேசத்தில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அண்மையில் டெங்கு நோயாளியாக இனங்காணப்பட்டவரின் வீட்டின் சுற்றுச்சூழலை அவதானித்ததன் பின்னர் அப்பகுதியில் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய அபாயம் காணப்பட்டமையால் அப்பகுதிகளில் உள்ள பல வீடு கள் பரிசோதனை செய்யப்பட்டன.

அத்துடன் வீடுகள் மற்றும் சூழல்களை டெங்கு நுளம்புகள் பரவக்கூடியதாக வைத்திருந்த சிலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன் எச்சரிக்கையுடனான ஆலோசனையும் வழங்கப்பட்டது.



மேலும், குறித்த டெங்கு தடுப்பு களப்பணியில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்புப் பணியாளர்கள் அடங்களான குழுவினர் ஈடுபட்டனர்.

குறுகிய காலத்தில் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் அழிக்கப்படுவதுடன் மலசல கூடங்களும் சீரமைக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. டெங்கு நோயிலிருந்து பாதுகாப்பதற்கான வீட்டின் உட்புறத்தையும் சுற்றுப்புற சூழலையும் தொடர்ச்சியாக அவதானித்து டெங்கு நுளம்புகள் பரவுகின்ற இடங்களை சுத்தமாக வைத்திருப்போம் எனும் துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் பொதுமக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டன. தற்போது மழை பெய்து வருவதால் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களைக் கண்டறிந்து தடுப்பதற்கான டெங்கு களத் தடுப்பு பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டன. (எ)

# தோணா அபிவிருத்தி தொடர்பில் சாய்ந்தமருதில் கலந்துரையாடல்



சாய்ந்தமருது, ஏப். 30

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருதில் தோணா அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவின் கோரிக்கைக்கு அமைவாக, சாய்ந்தமருது பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தோணா அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டு, அதற்கான ஒதுக்கீடு பாராளுமன்ற உறுப்பினரின் பரிந்துரையின் பேரில், அவரது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 3.2 மில்லியன் ரூபாய் பெறுமதியான செயல்திட்டம் கடந்த மாதம் செய்யப்பட்டிருந்தது.

இதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதற்காக சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில், தோணா அபிவிருத்திக்கான வேலைத்திட்டத்தை ஆரம்பமாக முன்னெடுப்பதற்கான பணிப்புரைகளை உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடியதோடு, அதற்கான ஆலோசனைகளையும் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா வழங்கினார். (எ)

# அம்பாறையில் ஆழ்கடல் சுழியோடி பயிற்சி

சம்மாந்துறை, ஏப். 30

சம்மாந்துறை அல் உஸ்வா மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காத்தல் படைக்கு அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்களுக்கு ஆழ்கடல் சுழியோடி பற்றிய கற்கை நெறியும் பயிற்சி நெறியும் கடந்த 3 நாட்களாக (26,27,28,) தொடர்ச்சியாக ஒலுவில் துறைமுகத்தின் இலங்கை கடற்படையின் ஆழ்கடல் சுழியோடி குழுவின் பொறுப்பதிகாரி பத்திரணவின் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறியில் ஆழ்கடல் சுழியோடிகள் பயன்படுத்தும் உபகரணங்கள், ஆழ்கடல் சுழியோடிகளுக்கு ஏற்படும் நோய்கள், ஆழ்கடல் சுழியோடி மூலம் மீட்பு, ஆழ்கடலில் எவ்வளவு தூரம் செல்லலாம், ஆழ்கடலில் ... முறைகள் என பல்வேறு ஆழ்கடல் சுழியோடி பற்றிய கற்கை பயிற்சியும் வழங்கப்பட்டது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் சாய்ந்தமருது, சம்மாந்துறை, வளத்தாப்பிட்டி போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட ஏழு ஆழ்கடல் சுழியோடிகளுக்குமான விசேட ஏழு நாட்கள் பயிற்சி நெறி கடற்படையின் விசேட ஆழ்கடல் சுழியோடி குழுவினரினால் வழங்கப்படவுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூன்று நாட்கள் போர் நிறுத்தம்

## ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவிப்பு

மொஸ்கோ, ஏப். 30

**இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்ததன் 80ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி உக்ரைன் மீதான போர் மூன்று நாட்கள் நிறுத்தப்படுகிறது என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.**



உக்ரைன், ரஷ்யா இடையேயான போர் ஆயிரத்து 160 நாளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழந்தனர்.

போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால், அந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையில் போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இதனிடையே, கிறிஸ்தவ மதத்தினரின் முக்கிய நிகழ்வான ஈஸ்டர் பண்டிகை கடந்த 20ஆம் திகதி கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் மட்டும் தற்காலிக போர் நிறுத்தத்தை ரஷ்யா அமுல்படுத்தியது. அதன்பின்னர், மீண்டும் போர் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், உக்ரைன் மீதான போரை மூன்று நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்துவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இதன்படி, அடுத்த மாதம் 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை மூன்று நாட்களுக்கு போரை நிறுத்துவதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவித்துள்ளார்.

இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்ததன் 80ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி உக்ரைன் மீதான போர் 3 நாட்கள் நிறுத்தப்படுகிறது. இரண்டாம் உலகப்போரின் முக்கிய போராக "பெரும் தேசபக்தி போர்" பார்க்கப்படுகிறது. ஜேர்மனியை எதிர்த்து சோவியத் யூனியன் (ரஷ்யா) போரிட்டதே "பெரும் தேசபக்தி போர்" என அழைக்கப்படுகிறது. அந்தப் போர் நிறைவடைந்த 80ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி உக்ரைன் மீதான போரை 3 நாட்கள் நிறுத்த புடின் ஒப்புதல் அளித்துள்ளார்.

3 நாட்கள் தற்காலிக போர் நிறுத்தம் தொடர்பான ரஷ்யாவின் அறிவிப்புக்கு உக்ரைன் தரப்பில் இதுவரை எந்தப் பதிலும் தெரிவிக்கப்படவில்லை. (எ)

# சர்வதேச சட்டத்தை மீறியது வடகொரியா

## தென்கொரியா குற்றச்சாட்டு

சியோல், ஏப். 30

வடகொரியா சர்வதேச சட்டத்தை மீறியதாக தென்கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

நேட்டோ கூட்டமைப்பில் இணைய முயன்ற உக்ரைன் மீது ரஷ்யா 2022ஆம் ஆண்டு போர் தொடுத்தது. 3 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்துக்குள் உக்ரைன் படைகள் நுழைந்தன. தொடர்ந்து நடைபெற்ற தாக்குதலில் குர்ஸ்க் பிராந்தியத்தை உக்ரைன் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

பின்னர் படைகள் மேற்கொண்டு உள்நுழைவதைத் தடுக்க ஆயிரக்கணக்கான ரஷ்ய வீரர்கள் எல்லையில் குவிக்கப்பட்டனர். இதில் ரஷ்யாவுக்கு ஆதரவாக வடகொரியாவும் சுமார் 15 ஆயிரம் படையினரை அங்கு அனுப்பியது.

உக்ரைன் தாக்குதலில் சுமார் 4 ஆயிரம் படையினர் ஒரேநாளில் கொன்று குவிக்கப்பட்டனர். இதனையடுத்து கடந்த ஜனவரி மாதம் மேலும் 3 ஆயிரம் படையினரை ரஷ்யாவுக்கு வடகொரியா அனுப்பியது.

இதனால் உக்ரைன் தாக்குதலை முறியடித்த ரஷ்யா குர்ஸ்க் பிராந்தியத்தை மீண்டும் கைப்பற்றியது.

இந்த நிலையில், உக் ரைன் இராணுவத்தால் புதைத்து வைக்கப்பட்ட கண்ணிவெடியை அகற்றும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே குர்ஸ்க் பிராந்தியத்தைக் கைப்பற்ற உதவிய வடகொரியாவுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நன்றி தெரிவித்துள்ளார். இதுகுறித்து புடின் கூறுகையில், குர்ஸ்க் பிராந்தியத்தில் நிறுத்தப்பட்ட வடகொரிய படையினர் ரஷ்யாவை தங்களது சொந்த தேசம் போல கருதி வீரத்துடன் போரிட்டனர். அவர்களில் பலர் தங்கள் இன்னுயிரையும் தியாகம் செய்தனர். அத்தகைய வீரர்களுக்கு ரஷ்யா மிகவும் கடமைப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இந்த நிலையில் சர்வதேச சட்டத்தை மீறி ரஷ்யாவுக்கு படையினர்களை அனுப்பியதாக வடகொரியா மீது தென்கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது. ரஷ்யாவுக்கு இராணுவத்தினரை அனுப்பியதாக உக்ரைன் முன்னரே குற்றஞ்சாட்டியிருந்தது. ஆனால், இதற்கு வடகொரியா தரப்பில் எவ்வித பதிலும் தெரிவிக்கப்படவில்லை. (எ)

# பாகிஸ்தானிலிருந்து இதுவரை 1,000 இந்தியர்கள் வெளியேற்றம்

லாகூர், ஏப். 30

பாகிஸ்தானிலிருந்து இதுவரையில் 1,000 இந்தியர்கள் வெளியேற்றப்பட்டனர்.

ஜம்மு-காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காமில் உள்ள சுற்றுலாத் தலத்தில் கடந்த 22ஆம் திகதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலுக்கு லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான திரெசிஸ்டண்ட் பிரண்ட் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து இந்தியாவில் வசித்து வந்த பாகிஸ்தானியர்கள் உடனடியாக வெளியேற மத்திய அரசு உத்தரவிட்டது.

இதேவேளை, இந்தியாவின் நடவடிக்கைக்கு பாகிஸ்தானும் பதிலடி கொடுத்துள்ளது. இதன்படி, பாகிஸ்தானில் வசித்து வந்த இந்தியர்கள் உடனடியாக வெளியேற அந்த நாட்டு அரசு உத்தரவிட்டது. மேலும், இந்தியாவில் வசித்து வரும் பாகிஸ்தானியர்கள் இன்று 30ஆம் திகதிக்குள் பாகிஸ்தான் திரும்பவும் உத்தரவிட்டுள்ளது. இதனால் இரு நாட்டு எல்லையிலும் மக்கள் கூட்டம் அதிகமாக உள்ளது.

இந்த நிலையில், கடந்த 6 நாட்களில் பாகிஸ்தானிலிருந்து 1,000 இந்தியர்கள் வாகா எல்லை வழியாக வெளியேறியுள்ளதாக பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. மேலும், இந்தியாவிலிருந்து தற்போது வரை 800 பாகிஸ்தானியர்கள் சொந்த நாட்டுக்கு திரும்பியுள்ளதாகவும் பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. (எ)

# இந்தியாவை விட்டு வெளியேறாத பாகிஸ்தானியர்களுக்கு சிறை!

புதுடில்லி, ஏப். 30

இந்திய மத்திய அரசு விதித்துள்ள குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் இந்தியாவை விட்டு வெளியேறாத பாகிஸ்தானியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்கள் கைது செய்யப்படுவதுடன் சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி ஜம்மு காஷ்மீரின் மினி சுவிட்சர்லாந்து என்று அழைக்கப்படும் பைசரன் பள்ளத்தாக்கில் பாகிஸ்தான் தொடர்புடைய தீவிரவாதிகள் இராணுவ உடையில் வந்து நடத்திய கொடூரத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் சுற்றுலாப் பயணிகள்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியாவில் வசிக்கும் பாகிஸ்தானியர்களின் விசாக்களை மத்திய அரசு உடனடியாக இரத்துச் செய்தது. சார்க் விசா வைத்துள்ளவர்கள் வெளியேறுவதற்கான காலக்கெடு ஏப்ரல் 26ஆம் திகதியுடன் முடிவடைந்தது. மருத்துவ விசாவில் வந்தவர்கள் வெளியேறுவதற்கான காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது.

காலக்கெடுவுக்கு பின்னரும் இந்தியாவில் தங்கியுள்ள பாகிஸ்தானியர்கள் அனைவரும் கைது செய்யப்படுவர். கடந்த ஏப்ரல் 4 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ள குடிவரவு மற்றும் வெளிநாட்டினர் சட்டம் 2025 இன் படி, அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்வதுடன் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது அதிகபட்சம் இலங்கை மதிப்பில் 9 இலட்சம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக பெற்றுத்தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஈரான் துறைமுகத்தில் விபத்து: 46 பேர் பலி, 1000 பேர் படுகாயம்

தெஹ்ரான், ஏப். 30

ஈரான் துறைமுகத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி 46 பேர் பலியாகினர். 1000 பேர் படுகாயமடைந்தனர்.

ஈரானின் பாந்தர் அப்பாஸ் நகரில் மிகப்பெரிய வர்த்தக துறைமுகம் உள்ளது. இந்தத் துறைமுகத்தில் கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை மிகப்பெரிய வெடி விபத்து ஏற்பட்டது.

இந்த வெடி விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 46 ஆக அதிகரித்தது. மேலும், இந்தச் சம்பவத்தில் 1,000இற் கும் மேற்பட்டோர் படுகாயம



டைந்துள்ளனர். இந்த வெடி விபத்துக்கான காரணம் குறித்து ஈரான் அதிகா ரிகள் இதுவரை எதுவும் கூற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு 7 பேர் உயிரிழப்பு

லாகூர், ஏப். 30

பாகிஸ்தானில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 7 பேர் உயிரிழந்தனர்.

9 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பாகிஸ்தானின் கைபர் பக்துவா மாகாணம் தெற்கு வாரிஸ்தான் மாவட்டம் வனா கிராமத்தில் உள்ள அமைதி பேச்சுவார்த்தை குழு அலுவலகத்திலேயே நேற்றுக் காலை இந்த குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்தது.

இதில், 7 பேர் உயி ரிழந்தனர். இந்த குண்டு வெடிப்பு தாக்குதலுக்கு இது வரை எந்த பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (எ)

# இந்தியா நிச்சயம் தாக்குதல் நடத்தும்

## பாக். பாதுகாப்பு அமைச்சர்

லாகூர், ஏப். 30

இந்தியா நிச்சயம் தாக்குதல் நடத்தும் என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் வாஜா முகமது ஆசிப் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காமில் உள்ள சுற்றுலாத் தலத்தில் கடந்த 22ஆம் திகதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில், பஹல்காம் தாக்குதல் தொடர்பில் பாகிஸ்தான் மீது இந்தியா நிச்சயம் தாக்குதல் நடத்தும் என்று அமைச்சர் குவாஜா முகமது ஆசிப் தெரிவித்துள்ளார். ரொய்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். " எங்கள் மீது இந்தியா நிச்சயம் தாக்குதல் நடத்தும். எங்கள் படைகளை நாங்கள் தயார் நிலையில் வைத்துள்ளோம். இந்தச் சூழ்நிலையில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தியா தாக்குதல் நடத்தலாம் என்பது குறித்து அரசிடம் இராணுவம் ஏற்கனவே தெரிவித்துவிட்டது. பாகிஸ்தான் உச்சபட்ச உஷார் நிலையில் உள்ளது. எங்கள் நாட்டின் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோம்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அபார வெற்றி

ஜெய்ப்பூர், ஏப். 30

குஜராத் அணிக்கு எதிரான போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணி அபார வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். தொடரில் ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சுப்மன் கில் தலைமையிலான குஜராத் ரைற்றன்ஸ், ரியான் பராக் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய


குஜராத்தின் தொடக்க வீரர்களாக சாய் சுதர்சன் மற்றும் சுப்மன் கில் இருவரும் களமிறங்கினர். இருவரும் நிதானமாகவும், அதே வேளையில் மோசமான பந்துகளை பௌண்ட்ரிகள் அடித்து ஓட்டங்கள் குவித்தனர். இதில் சுப்மன் கில் அரைச்சதம் அடித்து அசத்தினார். மறுபுறம் தடுமாறி வந்த சாய் சுதர்சன் 30 பந்தில் 39 ஓட்டங்கள் எடுத்த நிலையில் தீக்சனா பந்துவீச்சில் ரியான் பராக்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இதையடுத்து அதிரடி ஆட்டக்காரர் ஜாஸ் பட்லர் களமிறங்கினார். சுப்மன் கில் - பட்லர் இணை அதிரடியாக ஆடி ஓட்டங்கள் சேர்த்தது. இதில் பட்லர் சிக்ஸர் மழை பொழிந்தார். மறுபுறம் அதிரடியாக ஆடிய கில் 84 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து வாஷிங்டன் சுந்தர் களம் புகுந்தார்.

இறுதியில் குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 209 ஓட்டங்கள் எடுத்தது. குஜராத் தரப்பில் அதிகபட்சமாக சுப்மன் கில் 84 ஓட்டங்கள் அடித்தார். ராஜஸ்தான் தரப்பில் தீக்சனா 2 விக்கெட்கள் வீழ்த்தினார். தொடர்ந்து 210 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் அணி களமிறங்கியது.

ராஜஸ்தான் அணியின் தொடக்க வீரர்களாக ஜெய்ஸ்வால்-வைபர் சூர்யவன்ஷி களமிறங்கினர். இந்த ஜோடி குஜராத் அணியின் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்தது. நடப்பு ஐ.பி.எல். சீசனில் மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் 14 வயது இளம் வீரர் வைபவ் சூர்யவன்ஷி, இந்த ஆட்டத்தில் 17 பந்துகளில் 51 ஓட்டங்கள் விளாசி அசத்தினார்.

இதன் மூலம் ஐ.பி.எல். தொடரில் இளம் வயதில் அரைச்சதம் அடித்த வீரர் என்ற சாதனையை வைபவ் படைத்துள்ளார். இதன் பிறகும் வைபவ் சூர்யவன்ஷியின் அதிரடி தொடர்ந்தது. கரீம் ஜனத் வீசிய 10ஆவது ஓவரில் வைபவ் 3 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளை பறக்கவிட்டார்.



தொடர்ந்து 35 பந்துகளில் 11 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிகளுடன் சதம் விளாசினார். இதன் மூலம் ஐ.பி.எல். போட்டிகளில் மிக இளம் வயதில் சதம் அடித்த வீரர் என்ற சாதனையை வைபவ் சூரியவன்ஷி படைத்துள்ளார். இந்த ஆட்டத்தின் மூலம் ஓர் அணிக்கு எதிராக பவர்பிளே ஓவர்களில் ராஜஸ்தான் அணி அதிகபட்ச ஓட்டங்களை(87 ஓட்டங்கள்) பதிவு செய்துள்ளது

அதே போல் ஐ.பி.எல். வரலாற்றில் கிறிஸ் கெய்லுக்கு பிறகு(30 பந்துகளில் சதம்) அதிவேக சதம் அடித்த 2ஆவது வீரர் என்ற சாதனைக்கும் வைபவ் சூரியவன்ஷி சொந்தக்காரராகியுள்ளார்.

வைபவ் சூரியவன்ஷி ஆட்டமிழந்த பிறகு களத்துக்கு வந்த நிதிஷ் ராணா, 4 ஓட்டங்களில் வெளியேறினார். அடுத்து வந்த ரியான் பராக், தனது பங்கிற்கு அதிரடி காட்டி 15 பந்துகளில் 32 ஓட்டங்கள்(2 சிக்ஸர், 2 பௌண்ட்ரிகள்) விளாசினார்.

மறுமுனையில் தனது அதிரடி ஆட்டத்தை தொடர்ந்து வந்த ஜெய்ஸ்வால் 31 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். 9 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் ஜெய்ஸ்வால்(70 ஓட்டங்கள்) இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

இறுதியில் ராஜஸ்தான் அணி 15.5 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 212 ஓட்டங்கள் குவித்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (எ)

# பும்ரா புதிய சாதனை

மும்பை, ஏப். 30

மும்பை அணிக்காக அதிக விக்கெட்கள் வீழ்த்தியவர் என்ற புதிய சாதனையை பும்ரா படைத்துள்ளார்.

18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற 45ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின. இதில் 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி அபார வெற்றி பெற்றது. மும்பை தரப்பில் ஜஸ்பிரீத் பும்ரா அதிகபட்சமாக 4 விக்கெட்களை வீழ்த்தி வெற்றிக்கு வித்திட்டார்.

இந்த போட்டியில் 4 விக்கெட்கள் வீழ்த்திய பும்ரா புதிய சாதனை படைத்துள்ளார். மும்பை அணிக்காக அவர் வீழ்த்திய விக்கெட்கள் எண்ணிக்கை 174ஆக அதிகரித்தது.

இதன் மூலம் மும்பை அணிக்காக அதிக விக்கெட்கள் வீழ்த்திய லசித் மலிங்கவின் (170 விக்கெட்கள்) சாதனையை தகர்த்துள்ளார். (எ)

# கோகோ காப் வெற்றி

மட்ரிட், ஏப். 30

மட்ரிட் ஓபின் ரென்னிஸ் தொடரில் அமெரிக்க வீராங்கனை கோகோ காப் வெற்றி பெற்றுள்ளார்.



பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள மட்ரிட் ஓபின் ரென்னிஸ் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் கோகோ காப், சுவிட்சர்லாந்தின் பெலிண்டா பென்சிக் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய கோகோ காப் 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் பெலிண்டா பென்சிக்கை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். (எ)

# 14 வயதில் பல சாதனைகள் வைபவ் சூர்யவன்ஷி அசத்தல்



ஜெய்ப்பூர், ஏப். 30

18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் அரங்கேறிய 47ஆவது லீக் ஆட்டத்தில் குஜராத் - ராஜஸ்தான் அணிகள் மோதின.

இதில் அதிரடியாக விளையாடிய வைபவ் சூர்யவன்ஷி வெறும் 35 பந்துகளில் சதம் அடித்தார்.இதனால், ராஜஸ்தான் அணி 15.5 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 212 ஓட்டங்கள் குவித்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. 14 வயதேயான வைபவ் சூர்யவன்ஷி ஆட்டநாயகன் விருது வென்றார்.

இந்த ஆட்டத்தில் சதமடித்ததன் மூலம் வைபவ் சூர்யவன்ஷி பல சாதனைகள் படைத்துள்ளார்.

1. ஐ.பி.எல். வரலாற்றில் அதிவேகமாக சதமடித்த இந்திய வீரர் என்ற இமாலய சாதனையை படைத்துள்ளார்.

2. ஐ.பி.எல். தொடரில் ஒரு போட்டியில் அதிக சிக்ஸர் அடித்த இந்திய வீரர் என்ற மாபெரும் சாதனையில் முரளி விஜய்யுடன் (11 சிக்ஸர்கள்) முதலிடத்தை பகிர்ந்துள்ளார்.

3. ஐ.பி.எல். தொடரில் குறைந்த வயதில் ஆட்டநாயகன் விருது வென்ற வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

4. ஐ.பி.எல். வரலாற்றில் குறைந்த இன்னிங்ஸ்களில் (3ஆவது இன்னிங்ஸ்கள்) சதமடித்த இந்திய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். (எ)

# எனக்கு பயம் இல்லை

## வைபவ் சூர்யவன்ஷி

ஜெய்ப்பூர், ஏப். 30



எனக்கு பயம் கிடையாது. நான் அதிகம் யோசிக்க வில்லை. நான் விளையாடுவதில் மட்டுமே கவனம் செலுத் துகிறேன் என்று வைபவ் சூர்யவன்ஷி தெரிவித்தார்.

குஜராத்துக்கு எதிரான ஆட்டத்தில் சதம் விளாசிய வைபவ் சூர்யவன்ஷி ஆட்ட நாயகன் விருது வென்றார்.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் அரங்கேறிய 47ஆவது லீக் ஆட்டத்தில் குஜராத் - ராஜஸ்தான் அணி கள் மோதின. இதில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அபார வெற்றி பெற்றது. 14 வயதேயான வைபவ் சூர்யவன்ஷி 101 ஓட்டங்கள் குவித்தார்.


இந்த நிலையில் இந்த போட்டியில் ஆட்ட நாயகன் விருது வென்ற வைபவ் சூர்யவன்ஷி கூறுகையில், “இது மிகவும் நல்ல உணர்வு. இது ஐ.பி.எல். கிரிக்கெட்டில் எனது முதல் சதம்.

அதுவும் எனது மூன்றாவது இன்னிங் ஸிலேயே வந்தது சிறப்பானது. இந்த போட்டிக்கு முந் தைய என்னுடைய பயிற்சியின் விளைவு இங்கே காட்டப்பட்டுள்ளது. நான் பந்தைப் பார்த்து விளையாடுகிறேன்.

ஜெய்ஸ்வாலுடன் துடுப்பாட்டம் செய்வது நல்லது. அவர் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குச் சொல்கிறார். மேலும் அவர் நேர்மறையான விடயங்களை எனக்குள் செலுத்துகிறார். ஐ.பி.எல். போட்டியில் 100 ஓட்டங்கள் எடுப்பது கனவாக இருந்தது. அது நிறைவேறியுள்ளது. எனக்கு பயம் கிடையாது. நான் அதிகம் யோசிக்கவில்லை. நான் விளையாடுவதில் மட்டுமே கவனம் செலுத்துகிறேன்”- என்றார்.

மட்ரிட் ஓபின் ரென்னிஸ்:

# மிர்ரா ஆண்ட்ரீவா காலிறுதிக்கு தகுதி



மட்ரிட், ஏப். 30

மட்ரிட் ஓபின் ரென்னிஸ் தொடரில் மிர்ரா ஆண்ட்ரீவா காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள மட்ரிட் ஓபின் ரென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்றில் ரஷ்யாவின் மிர்ரா ஆண்ட்ரீவா, உக்ரைனின் யூலியா ஸ்டாரோடுப்ட்சேவா உடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய மிர்ரா ஆண்ட்ரீவா 6-1 மற்றும் 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபால்மூல...

தபால் மூலம் வாக்கப்புக்கு பதிவு செய்து வாக்களிக்காதவர்களுக்கு இனி வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் இல்லை என்றும் ஆணையாளர் கூறியுள்ளார்.

எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 6 இலட்சத்து 48 ஆயிரத்து 495 பேர் தகுதி பெற்றிருந்தனர். இந்த நிலையில், தபால் மூல வாக்களிப்புகள் கடந்த 24, 25ஆம் திகதிகளிலும் நேற்றுமுன்தினமும் நேற்றும் நடைபெற்றன.

இதனிடையே, 4 நாட்கள் நடைபெற்ற தபால் மூல வாக்களிப்பு மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

வாக்களிப்பு மிகவும் உகந்த மட்டத்தில் இருப்பதை தனது அமைப்பு அவதானித்ததாக அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (ஐ)

## ஓய்வூதிய...

அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்ணான்டோ, தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

நிதி அமைச்சில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, ஓய்வூதியர்கள் எதிர்கொள்ளும் ஊதிய முரண்பாடுகள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், ஓய்வூதிய சீர்திருத்தம், 2015 முதல் ஓய்வூதியம் பறிக்கப்பட்டமை - மற்றும் 1997 ஆம் ஆண்டு பி.சி. பெரேரா ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மூலம் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு ஏற்பட்ட ஊதிய முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் விரிவாக ஆலோசிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

இந்த சந்திப்பு மிகவும் பயனுள்ள வகையில் முடிவடைந்ததாகவும், இலங்கையில் 7 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஓய்வூதியர்கள் எதிர்கொள்ளும் ஊதிய பிரச்னைகளைத் தீர்க்க அரசு உடனடியாக தலையிடும் - என்றார்.

இந்த பிரச்னை தொடர்பாக மேலும் ஒரு சந்திப்பை நாளை வியாழக்கிழமை நடத்தவும் இணக்கம் காணப்பட்டது. அந்த சந்திப்பில் அரச நிர்வாக அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் ஓய்வூதிய திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர் என்றும் தெரிய வருகிறது. (ஐ)

## கனடா...

என்பது குறிப்பிடத்தக்கது.

ஒக்வில்லே கிழக்கு தொகுதியில் போட்டியிட்ட அனிதா ஆனந்தும் வெற்றிபெற்றார். இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கத.

பிரதமர் மார்க் கார்னி தலைமையிலான அரசாங்கத்தில் ஹரி ஆனந்தசங்கரி நீதி அமைச்சராகவும் அனிதா ஆனந்த் புதுமை, அறிவியல், தொழில்துறை அமைச்சராகவும் பதவி வகித்திருந்தனர். இந்நிலையில், அவர்களுக்கு மீண்டும் அமைச்சு பதவிகள் வழங்கப்படலாம். இதனிடையே, பிரதமர் கார்னியின் அமைச்சரவையில் தற்போதைக்கு மாற்றம் ஏற்படாது என்றே தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கன்சவேர்ட்டிவ் கட்சியின் சார்பில் மார்கம் - ஸ்ரௌவ்விலே தொகுதியில் போட்டியிட்ட நிரான் ஜெயநேசன், மார்கம் - தோர்ன்கில் தொகுதியில் போட்டியிட்ட லியொனல் லோகநாதன், பசுமை கட்சி சார்பில் எதோபிகோக் வடக்கு தொகுதியில் போட்டியிட்ட சரூன் பாலரஞ்சன் ஆகியோர் தோல்வியைத் தழுவினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமெரிக்க...

பயன்படுத்தவேண்டும் - என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், "அண்மையில், இந்தியாவுக்கு வருகை தந்த அமெரிக்க உப ஜனாதிபதி ஜேடி வான்ஸை பிரதமர் ஹரிணி சந்தித்திருக்க வேண்டும். ஒரு மணிநேரமாவது அவரை சந்தித்து பேச்சு நடத்துவதற்கு இந்தியாவின் உதவியை நாடியிருக்க வேண்டும். அமெரிக்க ஜனாதிபதி விதித்துள்ள வரிகள் உள் நாட்டு நிறுவனங்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றன. இதன் காரணமாக பாதிப்புகளை தவிர்ப்பதற்காக அரசாங்கம் சாத்திய மான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

"அமெரிக்காவின் புதிய வரிகள் குறித்து அமெரிக்காவின் விசேட வர்த்தக பிரதிநிதியுடன் பேச்சுகளை மேற்கொண்ட நாடுகள் இலங்கையும் இந்தியாவும் என சில தகவல்கள் தெரிவித்துள்ளன. எனினும், இந்தியா வுக்கும் இலங்கைக்கும் இடையிலான வித்தியாசம் என்னவென்றால் பிரதமர் மோடியால் அமெரிக்க உப ஜனாதி பதியை தனது நாட்டுக்கு அழைக்க முடிந்தது. இலங்கையின் உள்நாட்டு நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கத் தயார் என இந்திய பிரதமர் முன்னர் தெரிவித்திருந்தார். இதனை அரசாங்கம் சாதகமாக பயன்படுத்தவேண்டும் - என்றும் கூட்டம் ஒன்றில் பேசிய அவர் தெரிவித்தார். (ஐ)

## கனடிய

உத்தரவிட்டிருக்கிறார்கள். வரவிருக்கும் நாட்களும் மாதங்களும் சவாலானதாக இருக்கும். அவை சில தியாகங்களை கோரும். ஆனால், எங்கள் தொழிலாளர்களையும் எங்கள் வணிகங்களையும் ஆதரிப்பதன் மூலம் அந்த தியாகங்களைப் பகிர்ந்து கொள்வோம். அமெரிக்க துரோகத்தின் பாடங்களை கனடா மக்கள் ஒருபோதும் மறக்க வேண்டாம்." என்றார்.

இதனிடையே, தேர்தலில் வெற்றி பெற்றுள்ள பிரதமர் மார்க் கார்னி தலைமையிலான லிபரல் கட்சிக்கு சீனா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் பலரும் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். எனினும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னதாக அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடா அமெரிக்காவின் மாகாணமாக இணைய வேண்டும் என்று வலியுறுத்தினார். அத்துடன், வரிகளையும் அதிகரித்தார். அத்துடன், அப்போதைய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவை அவர் ஆளுநர் என்றும் விளித்திருந்தார். இதைத் தொடர்ந்து, லிபரல் கட்சி மக்கள் ஆதரவை இழந்து விட்டது என்று தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில் ஜஸ்ரின் ட்ரூடோ பிரதமர் பதவியிலிருந்து விலகி மார்க் கார்னியை பிரதமராக ஆதரவு அளித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து, கடந்த ஜனவரி நடுப்பகுதியில் பிரதமராக மார்க் கார்னி பதவியேற்றார். தொடர்ந்து, மார்ச் முற்பகுதியில் அமைச்சரவை மாற்றியமைத்தார். இதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தை கலைத்துத் தேர்தலுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

மீண்டும் லிபரல் கட்சி வெற்றி பெற்றுள்ளதால் அவர் பிரதமராக மீண்டும் பதவியேற்க வேண்டியது அவசியமில்லை. கார்னியின் அமைச்சரவையிலும் மாற்றம் ஏற்படாது என்று கூறப்படுகிறது. எனினும், பிரதமர் மாற்றியமைக்க விரும்பினால் அமைச்சரவையை அவர் மாற்றியமைக்கலாம். பாராளுமன்றம் முதல் தடவையாக கூடும்போது (திகதி குறிக்கப்படவில்லை) உறுப்பினர்கள் பதவியேற்று சபாநாயகர் தெரிவு செய்யப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ் அரசுக் கட்சிக்கு பணிமனை!

வவுனியா, ஏப்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் பணிமனை திறப்பு விழாவும் கலந்துரையாடலும் வவுனியா பூந்தோட்டத்தில் நேற்று நடைபெற்றது.

வவுனியா மாநகர சபைக்கு உட்பட்ட குடியிருப்பு வட்டாரத்தில் தமிழ் அரசுக் கட்சி சார்பாக ந. கருணாநிதி நேரடி வேட்பாளராக போட்டியிடுகிறார். சு. சந்திரசேகரன் பட்டியல் வேட்பாளராகவும் போட்டியிடுகின்றனர். இவர்களின் பிரசார பணிமனையே நேற்று திறந்து வைக்கப்பட்டது.

(ஐ-10)

## நாம்...

வெற்றிபெற்றமை போன்று உள்ளூராட்சி மன்றங்களையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொட்டாஞ்சேனையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இந்த நாட்டின் வரலாற்றை மாற்றிய ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் முடிவுகள் மூலம் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அரசாங்கம் உள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலிலும் நாம் வெற்றிபெறுவோம்.

நாட்டில், 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடைபெறவிருந்தது. ஆனால், ரணில் விக்கிரமசிங்க அந்தத் தேர்தலை முடக்குவதற்கு பல வேலைகளை செய்தார். இறுதியில் நாம் ஆட்சிக்குவந்த பின்னரே தேர்தலை நடத்துவதற்கான ஜனநாயக உரிமையை பாதுகாத்துள்ளோம்.

நாம் மக்களின் பணத்தை கொள்ளையடிப்பவர்கள் அல்லர். நாம் மக்களின் பணத்தை பாதுகாப்பவர்கள். ஓர் அரசாங்கம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற நாள் முதல் ஜனாதிபதி அநுர முன்னுதாரணமாக உள்ளார். அத்துடன், எதிர்த் தரப்பினர் தமது இயலாமையை மறைக்க எம்மை கொள்ளையர்கள் என்று கூறுகிறார்கள் - என்றார். (ஐ)

## ரணிலின்...

வெளியிட்டிருந்தார். இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் அறிவித்தல் விடுக்கப்பட்டமையை அடுத்து கடந்த 11ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி ரணில் தனது சகல சமூக வலைத்தள பக்கங்களிலும் தன்னால் அன்றைய தினம் முன்னிலையாக முடியாது என்றும் 17ஆம் திகதி முன்னிலையாவார் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இது ஒரு பொதுத் தகவலாகும். ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் இதன் ஊடாகவே அந்தத் தகவலை அறிந்திருப்பார். அவர் இந்தத் தகவலை தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதிவேற்றியிருந்தமையை மறந்தே கருத்துகளை வெளியிட்டிருக்கிறார். மாறாக இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இது குறித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கவில்லை. ரணில் ஆணைக்குழுவில் முன்னிலையாவது இரகசிய தகவல் அல்ல.

முன்னாள் ஜனாதிபதி ரணில் அவரின் சமூக வலைத்தளங்களில் இந்தத் தகவலைப் பகிர்ந்த பின்னரே ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அது தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார். அதனை விடுத்து இந்த விவகாரத்தில் அரசாங்கமோ அல்லது ஜனாதிபதியோ எந்தவகையிலும் தலையிடவில்லை - என்றார்.

முன்னதாக, இலஞ்ச, ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாவது தொடர்பில் தான் ஆணைக்குழுவுக்கு கடிதம் மூலம் அனுப்பிய தகவல்களை ஜனாதிபதி அநுர குமார பிரசார கூட்டங்களில் வெளியிட்டார். அவர் ஆணைக்குழுவுக்கு வரும் கடிதங்களை வாசித்திருக்கிறார் - அந்த ஆவணங்களை பெற்றிருக்கிறார் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியிருந்தார். இதற்கே அமைச்சரவை பேச்சாளர் பதிலளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமெரிக்கா

அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

மேலும், அமெரிக்காவால் விதிக்கப்பட்ட வரி இலங்கையை மாத்திரமல்ல உலக நாடுகளை பாதிப்படையச் செய்துள்ளது. எமக்கு 90 நாட்கள் வழங்கப்பட்டுள்ளமையால் குறுகியகாலத்தில் எவ்வாறான தீர்மானங்களை எடுக்கலாம் என யோசிக்கிறோம்.

அத்துடன், இந்தப் பிரச்னையில் நீண்டகால அடிப்படையில் தீர்வை காண்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. புதிய சந்தை வாய்ப்புகளை தேடுவது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் உள்நாட்டில் கலந்துரையாடல்களை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முன்னெடுத்து வருகிறார் என்றும் கூறினார். (ஐ)

## மின்சார...

சர்வதேச நாணய நிதியம் நான்காவது கட்ட கடனாக 34.4 கோடி டொலர்களை வழங்கவுள்ளது. இந்த நிலையில், செலவு மீட்பு விலையை மீட்பதை பொறுத்து அரசாங்கம் மின்சார கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்திலுள்ளது. கடந்த ஜனவரி மாதம் அரசாங்கம் மின்சார கட்டணத்தை 20 சதவீதம் குறைத்தது. இது செலவு மீட்பு விலை நிர்ணயமல்ல என்பதால் இதற்கு சர்வதேச நாணய நிதியம் அதிருப்தி தெரிவித்தது.

இந்த நிலையில், மின்சார உற்பத்தி செலவை பிரதிபலிக்கும் மின்சார கட்டணம் அவசியம் என்று ஐ. எம். எவ். வலியுறுத்தியுள்ளது. அத்துடன், மின்சார விலை நிர்ணய சூத்திரத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் அது பரிந்துரைத்துள்ளது.

ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் மின்சார கட்டணம் திருத்தப்படவுள்ளது. கட்டணத்தை திருத்தியமைக்கும் பணியில் இலங்கை மின்சார சபை ஈடுபட்டுள்ளதாகவும் அது நிறைவடைந்ததும் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அது சமர்ப்பிக்கப்படும் என்று இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## பட்டலந்த...

ஜே. வி. பி. புரட்சிக் காலத்தில் அதன் உறுப்பினர்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவளித்தவர்கள் கைது செய்யப்பட்டு அல்லது சட்டவிரோதமாக பிடித்துச் செல்லப்பட்டு சித்திரவதை கள், தடுத்து வைப்பு மற்றும் கொலை செய்யப்பட்டனர். இதற்காக பட்டலந்த வீடமைப்பு திட்டத்தில் தடுப்பு முகாம்கள், சித்திரவதை முகாம்கள் நிறுவப்பட்டன.

இந்த சித்திரவதை முகாம்கள் தொடர்பாக சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது - 25 வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டு, விசா ரணை நடத்தப்பட்டது. இந்த ஜனா திபதி ஆணைக்குழுவின் அறிக்கை அண்மையில் பாராளுமன்றில் சமர்ப் பிக்கப்பட்டது.

இந்த நிலையில், அடுத்த கட்ட முன்னெடுப்புகளுக்காக இந்த அறிக்கை சட்ட மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பில் விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தொடர்பு உள்ளது என்று குற்றச்சாட்டுகள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ஜனாதிபதி 3ஆம் திகதி வியட்நாமுக்கு பயணம்!

கொழும்பு, ஏப். 30



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மே 3 ஆம் திகதி வியட்நாமுக்கு பயணம் மேற்கொள்ள வுள்ளார் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஐ.நா. வெசாக் தின விழா இம்முறை வியட்நாமில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் ஜனாதிபதி பங்கேற் பார். 6 ஆம் திகதிவரை வியட்நாமில் தங்கி இருப் பார்.

இவ்விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடை யில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட வுள்ளன. இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள் ளது எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும், வியட்நாமுக்கும் இடையில் 4 புரிந் துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன. (அ)

## தேர்தல் தொடர்பில் மேலும் 14 முறைப்பாடுகள் பதிவு!

கொழும்பு, ஏப். 30

நேற்று காலை 06.00 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான 14 முறைப்பாடுகளை இலங்கை பொலிஸ் பெற்றுள்ளது.

முறைப்பாடுகளில் 01 தேர்தல் வன்முறை தொடர்பா கவும், 13 தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாகவும் பெறப்பட்டுள்ளன.

இந்தக் காலகட்டத்தில் எட்டு ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மார்ச் 03 முதல் ஏப்ரல் 28 வரை, தேர்தல் தொடர்பான மொத்தம் 412 முறைப்பாடுகள் பொலிஸ ாருக்கு கிடைத்துள்ளன.

அவற்றில், 326 தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பா னவை, 86 தேர்தல் வன்முறை தொடர்பானவை.

இந்த காலகட்டத்தில் மொத்தம் 32 வேட்பாளர்கள் மற்றும் 137 ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ள னர். மொத்தம் 31 வாகனங்களையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். (அ)

## சிங்கப்பூர் தேசிய பல்கலையில் இலங்கை மாணவருக்கு வாய்ப்பு

கொழும்பு, ஏப். 30

உயர்கல்வி ஒத்துழைப்புக்களுக்கான கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மற்றும் சிங்கப் பூரின் தேசிய பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை பட்டதாரி மாணவர்களுக்கு பட்டப்பின் படிப்புக்கான புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் உள்ளிட்ட உயர்கல்விக்கான ஒத்துழைப்புக்களை உருவாக்குவ தற்காக, உலகளாவிய ரீதியில் தரப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்களில் முதன்னிலையை வகிக்கின்ற சிங்கப்பூர் குடியரசின் தேசிய பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந் தத்தை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதன் மூலம் இலங்கை மாணவர்களுக்கு சிங்கப்பூரின் தேசிய பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் உள்ளிட்ட பட்டப்பின் படிப்புக்களை மேற்கொள்வதற்கும், இயலளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கெடுப்பதற்கும், ஒருங்கிணைந்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்ப மிடுவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச் சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)

# உயிர் அச்சுறுத்தல் உள்ளவர்கள் நாட்டை விட்டு வெளியேறுங்கள்!

### மகிந்த தேசப்பிரிய ஆலோசனை



கொழும்பு, ஏப். 30

**உயிர் அச்சுறுத்தல் உள்ளவர்கள் நாட்டை விட்டு வெளி யேறி விடுவதே மிகச் சிறந்த பாதுகாப்பாகும் என்று முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

அண்மைக்காலச் சம்பவங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உங்களில் யாருக்காவது கொலை மிரட்டல் விடுக்கப்பட் டால் கவனமாக இருந்து கொள் ளுங்கள்.

அண்மைக் காலங்களில் இறந்த வர்களில் பலர் தங்களுக்கு மரண அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி யிருந்தார்கள்.

அவர்கள் ஏதாவது தகராறுக ளுடன் தொடர்புடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் கவனமாக இருக்கவேண்டும் என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

அவர்கள் ஆயுதங்களை வைத்தி ருக்கக்கூடாது. அவ்வாறான உயிர் அச்சுறுத்தல் உள்ளவர்கள் இலங் கையை விட்டு வெளியேறலாம் அல்லது வீடுகளை விட்டும் வெளி யில் நடமாடுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும் - என்றார். (அ)

## தேசிய வெசாக் நுவரெலியாவில்!

கொழும்பு, ஏப். 30

இந்த ஆண்டு தேசிய வெசாக் நிகழ்வு நுவரெலியா வில் நடைபெறும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

மே 10 முதல்16 ஆம் திகதி வரை தேசிய வெசாக் வாரமாக அறிவிக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

2569 (2025) ஆவது ஸ்ரீ பௌத்த வருடத்தின் வெசாக் மகோற்சவம் நுவரெலியா மாவட்டத்தை மையமாகக் கொண்டு நுவரெலியா சர்வதேச பௌத்த நிலைய விகாரையில் நடத்துவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் நடைபெற்ற அமைச்சரவையில் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை இவ்வாறு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நுவரெலியா சர்வதேச பௌத்த நிலைய விகாரையை மையமாகக் கொண்டு தேசிய வெசாக் மகோற்சவத்தை நடத்துவதற்கும், 2025 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை வெசாக் வாரமா கப் பிரகடனப்படுத்துவதற்கும், குறித்த காலப்பகுதியில் பல்வேறு பௌத்த மத நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்க மைத்து நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (அ)

## கடந்த ஆட்சியாளர்கள்போல் செயல்படுகிறது அநுர அரசு!

யாழ்ப்பாணம், ஏப். 30

தொழில் சங்கங்களின் ஒருமித்த ஆதரவுடன் ஆட் சிப் பீடமேறிய இன்றைய அநுர தலைமையிலான அர சும் கடந்த கால அரசுகள் போலவே எம்மைத் தமக்கான பொம்மைகளாக பயன்படுத்த முனைகின்றது என வடமாகாண தொழிற்சங்கங்களின் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

எதிர்வரும் மே தின ஏற்பாடுகள் குறித்து யாழ்ப்பா ணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் கலந் துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே வடமாகாண தொழிற் சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-வடமாகாண தொழிற் சங்கங்களின் சம்மேளனம் கடந்த 4 ஆண்டுகளாக மே தினத்தை முன்னெடுத்து வருகின்றது.

இம்முறை காலச் சூழல் காரணமாக பிரமாண்டமன முறையில் மேதின எழுச்சி பேரணியை முன்னெடுக்க முடியாத நிலை இருப்பதனால், நல்லூர் முன்றலில் இருந்து காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் எழுச்சி பேர ணியானது ஆரியகுளம் சந்தியை சென்றடைந்து ஸ்ரான்லி வீதியூடாக யாழ் நகரை சென்றடைந்து அதன் பின் யாழ் மாவட்ட செயலகம் சென்றடைந்து வை.எம். சி.ஏ. மண்டபத்தில் கூட்டம் நடைபெறவுள்ளது.

நாம் இம்முறை 12 தொழிற் சங்கங்களின் ஒத்துழைப் புடன் குறித்த பேரணியை ஏற்பாடு செய்துள்ளோம். அந்த வகையில் இன்றைய அரசின் போக்கை சுட்டிக் காட்டும் வகையில் கோசங்கள் முன்வைக்கப்படவுள் ளன-என்றனர். (அ)

### நீதிபதிக்கு எதிராக அவதூறு

## 6 சமூக வலைத்தளக் கணக்குகள் குறித்து விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 30

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சசி மகேந்திரனுக்கு எதிராக அவதூறு பரப்பிய ஆறு சமூக வலைத்தளக் கணக்குகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சசி மகேந்திரன் தனக்கு அவதூறு விளைவிக்கும் வகையில் பொய்யான தகவல்களைப் பரப்பிய ஆறு சமூக ஊடகக் கணக்குகள் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடொன்றை அளித்துள்ளார்.

ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் பிள்ளை யானுக்கு பிணை வழங்கியமை உள்ளிட்ட பல்வேறு போலியான தகவல்கள் மற்றும் தனது தனிப் பட்ட தகவல்களை உள்ளடக்கி குறித்த சமூக வலைத்தளக் கணக் குகள் ஊடாக தனக்கு அவதூறு விளைவிக்கப்படுவதாக அவர் குறித்த முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் சமர்ப்பித்த அறிக்கையின் பேரில் குறித்த ஆறு சமூக ஊடகக் கணக் குகள் தொடர்பாக தகவல்களைப் பெறுவதற்கு, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் இணையக் கண்காணிப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவுக்கு கொழும்பு பிரதான நீத வான் தனூஜா லக்மாலி அனுமதி வழங்கியுள்ளார். (அ)

## முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கியுள்ள மேலதிக வாகனத்தை கையளிக்க காலக்கெடு

கொழும்பு, ஏப். 30

முன்னாள் ஜனாதிபதிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப் பட் டுள்ள 2 வாகனங்களுக்கும் மேல திகமான அரசாங்க வாக னங்களை மீள கையளிப்ப தற்கான காலக்கெடு வழங்கப் பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக ஜனாதிபதி செயல கத்தால், முன்னாள் ஜனாதிபதிக ளுக்கு தலா 3 வாகனங்கள் வழங் கப்பட்டிருந்தன. எனினும், முன் னாள் ஜனாதிபதி ஒருவர் 2 அரசா ங்க வாகனங்களை மட்டுமே பயன் படுத்த முடியும் என்ற அரசாங் கத்தின் முடிவைத் தொடர்ந்து, மீதமுள்ள வாகனத்தை திருப் பித் தருமாறு ஜனாதிபதி செய லகம் மூலம் எழுத்துபூர்வ கோரிக்கையொன்றை விடுத்தி ருந்தது. அதன்படி, இதுவரை ஜனா திபதி செயலகத்தில் வாகனங் களை ஒப்படைக்காதவர்களுக்கு சலுகைக் காலம் வழங்க ஜனாதிபதி செயல கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரி விக்கின்றன. ஒரு அமைச்ச ருக்கு வழங்கப்படும் சலுகைகள் முன் னாள் ஜனாதிபதிகளுக்கும் வழங்கப்படு கின்றன. அதன்படி, ஒரு அமைச்சர் வழக்கமாக இரண்டு அரச வாகனங் களைப் பயன்படுத்துகிறார். அவ்வாறே முன்னாள் ஜனா திபதிகளுக்கும் இரண்டு வாகனங் கள் ஒதுக்கப் பட் டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org